**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

**மதுரை மாநகராட்சி**

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு ஜூலை திங்கள் 18-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் : " இலமென்று வெ∴குதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர் "**

**பொருள் :** ஐம்புலன்களையும் வென்ற குற்றம் இல்லாத தெளிந்த ஞானமுடையவர்கள் நாம் இப்போது வறுமையுற்றோம் என்று பிறர் பொருளைக் கவர்தலில் ஈடுபடமாட்டார்கள்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

**இரங்கல் தீர்மானம்**
**மாமன்ற தீர்மானம் எண் : 37**

முன்னாள் பாரதப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்களது மறைவு நமது நாட்டிற்கு பேரிழப்பாகும். அவர் பாரதப் பிரதமராக இருந்தபோதும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் இந்திய நாட்டின் வளர்ச்சியையும், மதசார்பின்மையையும், கருத்தில் கொண்டு பெரும் பங்காற்றியுள்ளார். அவர்களது பாராளுமன்ற பணியை பாராட்டி 1995-ம் ஆண்டு **சிறந்த பாராளுமன்றவாதி** என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தேசத்தின் மதிப்புமிக்க தலைவர் முன்னாள் பாரதப் பிரதமர் திரு.சந்திரசேகர் அவர்களின் மறைவிற்கு மதுரை மக்கள் சார்பிலும், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், என் சார்பிலும், துணை மேயர் சார்பிலும் இந்த மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானம் வாசித்து முடித்தபின்பு அன்னாரின் மறைவிற்கு இரண்டு நிமிடம் நேரம் எழுந்து நின்று மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.

## 1) சி.டபிள்யு.3 / 0883 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 23.5.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 38**

**பதிவு செய்யப்பட்டது**

## 2) Jn.S1./ 03986/ 99

மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை III Phase விடுபட்ட பகுதகிளில் அமைக்கும் திட்டத்திற்கு 30 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட பாதாள சாக்கடை பகுதிகளை சீரமைக்கவும், ரூ.229.34 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 50%, மாநில அரசு 20% மற்றும் மாநகராட்சி பங்களிப்பு தொகை 30% என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி பங்களிப்புத் தொகை 30% தொகையை தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிறுவனத்திடமிருந்து (TUFICO) கடனாக பெற்று நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 39**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 3) சி.டபிள்யு.3 / 39181 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 10.7.2007ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 40**

**பதிவு செய்யப்பட்டது**

## 4) சி.டபிள்யு.3 / 0883 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 11.7.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 41**

**பதிவு செய்யப்பட்டது**

## 5) சி.டபிள்யு.2 / 0478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 11.7.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 42**

**பதிவு செய்யப்பட்டது**

## 6) சி.டபிள்யு.2 /39182/ 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -I விதி 19 (2)ன் படி 12.7.2007ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 43**

**பதிவு செய்யப்பட்டது**

## 7) ம.நி.1/ 09461 / 03

மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர் பணியிடத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலகத்திலிருந்து திரு. இக்பால் உசேன் அவர்களை பணிமாறுதல் மூலம் அயற்பணியின்கீழ் பணி நியமனம் செய்து வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயற்குறிப்பு எண். 39049/2006/சி1, நாள் : 26–4–2007ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** திரு. இக்பால்உசேன், உதவி ஆணையாளர் (பணி) ஆக 3.5.2007 பணியேற்பு செய்துள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் : 44**
**பதிவு செய்யப்பட்டது**

## 8) ம.நி.1/ 47282 / 95

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு மின்பிரிவில் மின்வாரியத்திலிருந்து அயற்பணியின் கீழ் பணிபுரிந்து வரும் இளநிலை / உதவி மின் பொறியாளர்களின் அயற்பணிக் காலம் மேலும் ஓராண்டிற்கு நீடிப்பு செய்து கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | அயற்பணிக்காலம் நீடிப்பு விபரம் |
|---|---|---|
| 1 | திரு. மீனாட்சி சுந்தரம், இ.நி.மி.பொ. தரம் –1 | 21.3.2007 முதல் 20.3.2008 ( 3வது ஆண்டு ) |
| 2 | திரு. கே. எம். ராஜாராம், உ. மின் பொறியாளர் | 9.3.2007 முதல் 8.3.2008 ( 3வது ஆண்டு ) |
| 3 | திரு. ஆர். கிருஷ்ணன் உ.மி. பொறியாளர் | 19.3.2007 முதல் 18.3.2008 ( 3வது ஆண்டு ) |

அன்னார்களின் அயற்பணிக்காலத்தை மேலும் ஓராண்டிற்கு நீடிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ள தலைமை மின் பொறியாளர் (பணி) அவர்களின் (Per) B.P. (Ch) No. 132, நாள் : 20.4.2007 ஆணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 45**
**பதிவு செய்யப்பட்டது**

## 9) Jn. S.1/16480/07

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களான

1) திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management)
2) காய்கறி மார்க்கெட் (Vegitable Market)
3) அடுக்குமாடி வாகனம் நிறுத்தும் இடம் (Multi Level Car Parking)

மேற்கண்ட மூன்று பணிகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட அரசு ஆணை G.O.(D) No. 160, Dated 17.4.2007 மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 46**
**பதிவு செய்யப்பட்டது**

## 10) ம.நி.1/ 18107 / 06

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புனரமைப்பு திட்டப் பணிகளை கண்காணிக்கவும், செயல்படுத்தவும், புதிய பணியிடங்களை முதற்கண் இரண்டாண்டுகளுக்கு தோற்றுவிக்கவும், அதற்கான செலவினங்களை மேற்கண்ட திட்ட நிதிலிருந்து மேற்கொள்ளவும், மத்திய அரசின் நிதி பெறப்படும் வரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினத்தை ஈடு செய்யவும், அனுமதி அளித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண். (2டி) 105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 26.6.2007–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 47**
**பதிவு செய்யப்பட்டது**

## 11) ம.நி.1/ 17150 / 07

மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர் (கணக்கு) பணியிடத்திற்கு திரு.ந.கேசவதாஸ், உதவி இயக்குநரை அயற்பணியின் கீழ் பணியமர்த்தி ஆணையிடப்பட்டுள்ள இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை செயற்குறிப்பு எண். ப.&நி.1 (3) 23709/07-1, நாள்.31.5.07ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு :** திரு.ந. கேசவதாஸ், உதவி ஆணையாளர் (கணக்கு) ஆக 25.6.2007 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் : 48**
**பதிவு செய்யப்பட்டது**

**12) ம.பொ.4/Est 241/06**

மதுரை மாநகராட்சி, வார்டு 12ல் அமைந்துள்ள சிவகாமி முதல் தெரு, 2வது தெரு மற்றும் குறுக்குத் தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணிக்கு 2006 – 07 மதிப்பீட்டு விலை விகிதத்தில் ரூ.20,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத் தீர்மானம் எண் : 380, நாள் : 15.03.07ன் படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் M/s மேகலா கன்ஸ்ட்ரக்ஸன், 580, கற்பக நகர், K.புதூர், மதுரை–7 என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டதை ஏற்று வணக்கத்திற்குரிய மேயரின் முன் ஒப்புதல் பெற்று வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே, முன் ஒப்புதல் பெறப்பட்ட வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 49**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13) ம.பொ.4/Est 317/06**

மதுரை மாநகராட்சி, வார்டு 12ல் அமைந்துள்ள வண்டிப்பாதை தெருவில் உள்ள பகுதியில் பாதாளச் சாக்கடை தோண்டிய பகுதிகளை சரி செய்து தார்சாலை அமைக்கும் பணிக்கு 2006 – 07 மதிப்பீட்டு விலை விகிதத்தில் ரூ.24,70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத் தீர்மானம் எண்:380, நாள்: 15.03.07ன் படி நிர்வாக ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் திரு.N.அழகு, கோமதிபுரம், மேலூர் என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டதை ஏற்று வணக்கத்திற்குரிய மேயரின் முன் ஒப்புதல் பெற்று வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே, முன் ஒப்புதல் பெறப்பட்ட வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 50**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14) ம.பொ.4/Est 494/06**

மதுரை மாநகராட்சி, வார்டு 10, செனாய் நகர் உயர்நிலைப்பள்ளி வளாகத்திற்குள் புதிய பள்ளிக் கட்டிடம் வேலைக்கு 2006 – 07 விலை விகிதத்தின் படி ரூ.16,70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக ஒப்புதலுக்கு வணக்கத்திற்குரிய மேயரின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் திரு.எம்.கருப்பசாமி, 13, வாஞ்சிநாதன் தெரு, அண்ணாநகர், மதுரை என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.43% குறைத்து கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரரின் டெண்டரை ஏற்று அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கவும் ஏற்கனவே நிர்வாக ஒப்புதலுக்குப் பெறப்பட்ட முன் ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 51**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) ம.பொ.4/Est 790/06**

மதுரை மாநகராட்சி, வார்டு 4 பத்திரிக்கையாளர் குடியிருப்பு பகுதிகளில் உள்ள சாலைகளை சீரமைத்து, தார் சாலையாக புதுப்பிக்கும் வேலைக்கு 2006-2007 ஆம் ஆண்டு விலை விகிதத்தின்படி, ரூ.24,90,000-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத் தீர்மானம் எண். 380 / 15.3.2007-ன் படி ஒப்புதல் பெற்று, டெண்டர் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் திரு. ஏ. சீனிவாசன், 9, புது எல்.ஐ.ஜி.காலனி, அண்ணாநகர், மதுரை-20 என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.04% குறைத்து கொடுக்கப்பட்டுள்ள டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வு குழுவின் முடிவிற்கு சமர்பிக்கப்பட்டதில், மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. எனவே முன் ஒப்புதல் பெறப்பட்ட வேலை துவங்கும் உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 52**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 16) மநி.5/ 19703 / 07

மதுரை மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தமுக்கம் கலையரங்கத்தில் மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு வந்த 100 காவலர்கள், 16.6.2007–ம் தேதி முதல் 29.6.2007–ம் தேதி வரை 14 நாட்கள் இலவசமாக கட்டணம் ஏதுமின்றி வணக்கத்தற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று தங்க அனுமதித்ததை மாமன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 53**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 17) மநி.5/ 21819 / 2007

தமிழ்நாடு அத்லடிக் அசோசியேஷன் மற்றும் மதுரை அத்லெடிக் அசோசியேஷனும் இணைந்து 7வது தேசிய பெடரேஷன் கோப்பை ஜுனியர் தடகள சாம்பியன் ஷிப் 2007–க்கான போட்டிகள் மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நடந்ததற்கு, போட்டிக்கு வருபவர்கள் தங்குவதற்கு 29.6.2007 மாலை 4.00 மணி முதல் 2.7.2007 மாலை 4.00 மணி வரை, கல்வி அலுவலரின் குறிப்பின்பேரில், கீழ்கண்ட மூன்று பள்ளிகளை,

1) இளங்கோ மேல்நிலைப்பள்ளி
2) பாண்டியன் நெடுஞ்செழியன் உயர்நிலைப்பள்ளி
3) கிருஷ்ணாபுரம் நெசவாளர் காலனி நடுநிலைப்பள்ளி

ஒதுக்கீடு செய்ததையும், போட்டிக்கு வந்த நடுவர்கள் தங்குவதற்கு இராணிமங்கம்மாள் சத்திரத்திலுள்ள அறைகள் கட்டணம் ஏதுமின்றி இலவசமாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலின்பேரில் வழங்கியதை மாமன்றத்தின் பின்னேற்புக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 54**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 18) B 30 / 14872 / 05

மதுரை மாநகராட்சி பகுதி கூடல்நகர் அருகில் கொன்னவாயன் சாலையில் அமைக்கப்படும் இரயில்வே மேம்பாலத்தில் தெருவிளக்கு பராமரிக்க நெடுஞ்சாலைதுறை திட்டங்கள் கோட்டப்பொறியாளர் அவர்களின் 04.05.05ம் தேதிய கடிதத்தில் கோரியதின் பேரில் மாநகராட்சி பகுதிக்கு தனியாக தெருவிளக்கு மின் இணைப்பு பெற வேண்டும், அமைக்கப்படும் தெருவிளக்குகளை முறையாக மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சம்மதம் ஏற்கனவே வழங்கப்பட்டு உள்ளது.

பாலமேடு பக்கம் அமைக்கப்படும் தெருவிளக்கு பராமரிப்பை ஏற்க ஆணையூர் மற்றும் விளாங்குடி பஞ்சாயத்துகள் முன் வராததால் மேற்கண்ட பாலத்தின் ஒருபகுதி இருளில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவே இது குறித்து 25.01.07 அன்று மாவட்ட ஆட்சியரகத்தில் நடந்த கூட்டத்திலும் அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரிடம் 08.02.2007 அன்று கலந்து ஆலோசித்த பின் மேற்கண்ட மேம்பாலம் மதுரை மாநகர மக்கள் பெரும்பாலும் உபயோகப்படுத்துவதாலும், மாநகராட்சி நகரப்பகுதியில் வசிக்கும் மக்கள் நெருக்கத்தை குறைக்க ஏதுவாக இருப்பதால் மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒரே ஒரு மின் இணைப்பு பெற்று அனைத்து விளக்குகளும் எரிவதற்கும் அதற்குரிய மின்துய்ப்பு கட்டணத்தை மதுரை மாநகராட்சியே செலுத்துவதற்கு மாவட்ட ஆட்சியரகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. எனவே மேற்கண்ட மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையை ஏற்று தற்போது பாலத்தில் நெடுஞ்சாலைத்துறைக்காக பொதுப்பணித்துறையினரால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து தெருவிளக்குகளுக்காக புதிய மின் இணைப்பு “ஆணையாளர், மதுரை மாநகராட்சி” என்ற பெயரில் பெற வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று உரிய படிவம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 55**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 19) B 30/13493/07

மதுரை மாநகராட்சி லாரி நிலையத்தில் உள்ள உபயோகப்படுத்தப்பட்டு தற்போது உபயோகப்படுத்த இயலாத நிலையில் கழிதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டள்ள கீழ்க்கண்ட 11 எண்ணம் மகேந்திரா ஜீப் வாகனங்களுக்கு அரசு பணிமனை தானியங்கி பொறியாளரின் வாகன மதிப்பு பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் ROC. No. 15767/06/E 1, நாள். 04.04.06 தெரிவிக்கப்பட்ட படி ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதில் நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு ஏலம் / டெண்டர் கோரியும் ஏலம் / டெண்டர் வரப்படாததாலும், 30.03.07 ல் நான்காவது முறையாக ஏலம் / டெண்டர் கோரியதில் மேற்காணும் 11 வாகனங்களுக்கு திரு.A. திருமலைகுமார், க.எண். 8 A, கொடிக்கால்காரத் தெரு, மணிநகரம், மதுரை என்பவர் டெண்டரில் டெண்டர் தொகை மாநகராட்சி மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக இருந்ததால் முதல்நிலை அலுவலர்கள் அடங்கிய குழு முன் 24.05.07 ல் பரிசீலணைக்கு வைக்கப்பட்டதில் இனி வருங்காலங்களில் ஏலம் / டெண்டரில் இதை விட அதிக தொகை எதிர்பார்க்க இயலாது என்பதால் குறைவாக விலை விகிதம் கொடுத்துள்ள டெண்டரை ஏற்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல்நிலை அலுவலர்கள் குழுவின் முடிவினை ஏற்று

மாநகராட்சி மதிப்பிற்கு குறைவாக கொடுத்துள்ள மேற்காணும் 11 எண்ணம் வாகனங்கள் விற்பனைக்கான டெண்டரை ஏற்றுக் கொள்ளவும், டெண்டர் தொகையினை செலுத்திய பின்பு டெலிவரி கொடுக்கவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு டெண்டதாரர் உரிய டெண்டர் தொகை செலுத்தியதால் அன்னாருக்கு 18.6.2007ல் டெலிவரி உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண். | கோப்பு எண் | வாகன எண் மகேந்திரா ஜீப் | வாங்கிய வருடம் | மாநகராட்சி மதிப்பு | விற்பனை வரி | மொத்தம் | ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள விலை வரி உள்பட | குறைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | B30/13493/06 | TNU 6276 | 1974 | 15000 | 600 | 15600 | 7777 | 7823 |
| 2. | B30/13492/06 | TNU 9459 | 1975 | 15000 | 600 | 15600 | 7777 | 7823 |
| 3. | B30/13495/06 | TNU 5544 | 1974 | 15000 | 600 | 15600 | 7777 | 7823 |
| 4. | B30/13494/06 | TNA 2960 | 1975 | 25000 | 1000 | 26000 | 12222 | 13778 |
| 5. | B30/13499/06 | TDZ 4912 | 1985 | 20000 | 800 | 20800 | 11111 | 9689 |
| 6. | B30/16958/06 | TDA 2825 | 1984 | 12000 | 480 | 12480 | 7777 | 4703 |
| 7. | B30/13489/06 | TNA 3543 | 1978 | 20000 | 800 | 20800 | 11111 | 9689 |
| 8. | B30/13488/06 | TDZ 3670 | 1985 | 30000 | 1200 | 31200 | 11111 | 20089 |
| 9. | B30/13485/06 | TDA 2807 | 1984 | 15000 | 600 | 15600 | 7777 | 7823 |
| 10. | B30/13491/06 | TNA 2961 | 1978 | 20000 | 800 | 20800 | 12222 | 8578 |
| 11. | B30/13486/06 | TDZ 3660 | 1985 | 30000 | 1200 | 31200 | 11111 | 20089 |

**மாமன்ற தீர்மானம் எண் : 56**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 20) Jn. S.1/39248/06

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சாலை போக்குவரத்து மேம்பாட்டிற்கு மேம்பாலங்கள் (Fly Over – Package-II) கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிப்பதற்கு ஆலோசகர் (Consultant) நியமனம் செய்வதற்கு 28.2.2007 தேதி டெண்டர் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

1) M/s. Universal Construction, Madurai
2) M/s. Cos Consultancy Services, Madurai.

வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் தொழில்நுட்ப திறன் ஆய்வு செய்ய மதிப்பாய்வு குழுவில் 28.03.2007 அன்று மேற்படி இரண்டு டெண்டர்களின் தொழில்நுட்ப விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, மேற்படி இரண்டு நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு,

| வ.எண். | நிறுவனத்தாரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Universal Construction, Madurai | Rs. 1,66,29,500.00 |
| 2 | M/s. Cos Consultancy Services, Madurai | Rs. 1,48,82,000.00 |

இதில் M/s. Cos Consultancy Services நிறுவனத்தாரின் விலை விகிதம் M/s.Universal Construction நிறுவனத்தாரின் விலை விகிதத்தை விட குறைவாக இருந்தது. எனவே 28.03.2007-ல் நடந்த மதிப்பாய்வு குழு கூட்டத்தில் M/s. Cos Consultancy நிறுவனத்தாரின் விலைவிகிதம் ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.

எனவே M/s. Cos Consultancy நிறுவனத்தார் கொடுத்துள்ள விலை விகிதத்தை ஏற்று சாலை போக்குவரத்து மேம்பாடு, மேம்பாலங்கள் தயாரிக்கும் பணியினை செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கிய உத்திரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பை பெறும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 57**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 21) ம.நி 1/HF1/54698/93

மதுரை மாநகராட்சி மைய சுகாதாரப்பிரிவில் மருத்துவ அலுவலராகப் பணிபுரிந்த Dr.N.ராமசாமி பணிக்கு தொடர்ந்து 6 மாதங்கள் வரை வராமல் இருந்ததால் அன்னாரின் மீது மதுரை மாநகராட்சி ஒழுங்கு மற்றும் பணிவிதிகள் **1975** விதி **8(2)**–ன் கீழ் குற்றச்சாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அன்னார் விசாரணைக்கு ஆஜராகாததாலும், விளக்கம் அளிக்காமல் இருந்தார். விசாரணை அலுவலரின் அறிக்கையின்படி அன்னாரை ஏன் பணி நிரந்தர நீக்கம் செய்யக் கூடாது என நோட்டீஸ் அனுப்பப்பட்டு பின்னர் அன்னார் தன் குடும்ப

சூழ்நிலை காரணமாக பணியேற்கவில்லை என விடுப்பு மனு சமர்ப்பித்தார். விசாரணை அலுவலரால் அன்னாரின் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் ஆனதால் அன்னார் HF1/0807/91, நாள் : **3.5.92** ஆணையின்படி நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டார். அன்னாரின் மேல்முறையீடு மனு மேல்முறையீடு குழுத் தீர்மானம் எண்.**38**, நாள் : **26.3.94–**ல் நிராகரிக்கப்பட்டும், அரசாணை எண்.**(2.டி)**, **25**/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 4.3.97–ன்படி, அன்னாரின் பணி நீக்கம் உறுதி செய்யப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.9947/97 தீர்ப்பு 18.9.2002-ல் அவருக்கு சாதகமாக மீண்டும் பணியில் சேர அனுமதிக்கவும், நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து பணியில் சேர அனுமதிக்கும் நாள் வரை உள்ள காலத்திற்கு பணப்பயன்கள் வழங்கத் தேவையில்லை எனவும் மேற்படி காலத்தை ஓய்வூதியம் மற்றும் பணிமுதிர்ச்சிக்கு கணக்கில் கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தொடர்பான மாநகராட்சி மேல்முறையீடு வழக்கு தொடரப்பட்டு, அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் பிரதிவாதிகளாக இருப்பதால் அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யாத பட்சத்தில், மாநகராட்சியால் தொடரப்பட்ட மேல்முறையீடு பயனளிக்காது எனவும், மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில் மனுதாரருக்கு பணிபார்க்காத காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் நிலை ஏற்பட்டுவிடும் என்ற மாநகராட்சி நிரந்தர வழக்கறிஞர் கருத்தின்படி மேற்படி மேல்முறையீடு வழக்கு மாநகராட்சியில் திரும்ப பெறப்பட்டு W.A.No.1048/97, 9.2.2007-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி நிர்வாக நலன்கருதி திரு.N.ராமசாமி மருத்துவ அலுவலரை உயர்நீதிமன்ற ஆணையின்படி மீண்டும் பணியில் சேர அனுமதித்தும், நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து மீண்டும் பணியில் சேரும் நாள்வரை உள்ள காலத்திற்கு எவ்வித பணப்பயன்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும், மேற்படி காலம் ஓய்வூதியம் மற்றும் பணிமுதிர்ச்சிக்கு மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்ற நிபந்தனையின் பேரிலும், வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியில் சேர ஆணை வழங்கியதை மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 58**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 22) B30/ 21654 / 07

மதுரை மாநகராட்சி லாரி நிலையத்தில் பராமரிக்கப்படும் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள வாகனங்களில் **10** வருடங்களுக்கு மேலாக உபயோகத்தில் உள்ளன. பழைய வாகனமாக இருப்பதால் பராமரிப்பு செலவினம் மற்றும் எரிபொருள் கூடுதலாக ஆகிறது. அவற்றை பட்டியலிட்டு அரசு பணிமனை மூலம் கழிவுநீக்கம் மற்றும் மதிப்பீடுகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | குடிநீர் லாரிகள் | – | 10 |
| **2.** | வாட்டர் ஃப்ளஷிங் லாரி | – | 1 |
| **3.** | எக்ஸா வேட்டர் | – | 5 |
| 4. | டிப்பர் லாரிகள் | – | 9 |
| 5. | தெருவிளக்கு ஏணி வண்டிகள் | – | 5 |
| **6.** | டவுன் பிளாஸிங் லாரி | – | 1 |
| **7.** | லாரிகள் | – | 5 |
| **8.** | டிராக்டர் | – | 3 |
| | **மொத்தம்** | | **39** |

மொத்தம் 39 வாகனங்களுக்கு உரிய மதிப்பீடுகள் அரசு பணிமனையிலிருந்து பெறப்பட்ட பின்பு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று விற்பனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 59**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 23) பி.11/10851/07

மதுரை மாநகராட்சியில், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி 29%லிருந்து 35%மாக உயர்த்தி வழங்க அரசாணை எண்.102, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள். 28.3.2007ல் உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் வெளியிட்டுள்ளப்படி ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 35% அகவிலைப்படி ஏப்ரல் 2007 மாதத்திலிருந்து உயர்த்தி வழங்கவும், 1.1.2007 முதல் 31.3.2007 வரை அகவிலைப்படி நிலுவை தொகைகளை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 60**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 24) ம.நி.1/14978/07

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் திருமதி. ஜி.மலர்கொடி பல்நோக்கு சுகாதாரப்பணியாளர் தனது 7.2.2007-ம் தேதிய மனுவில், தனது சொந்த ஊர் சென்னை சைதாப்பேட்டை எனவும், எனது கணவர் சென்னையிலுள்ள ஓர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும், 11 வயதில் மகனும் 7 வயதில் மகளும் உள்ளதாகவும், கணவரையும், குழந்தைகளையும் பிரிந்து வாழ்வது சிரமமாக உள்ளதாகவும், குடும்ப சூழ்நிலை காரணமாக மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் கோரியுள்ளார். அன்னாரின் மனுவின் பேரில், நகராட்சி நிர்வாக ஆணையாளர், தனது கடிதம் எண். 7141 / 2007 / மாநஅ2, நாள்.12.3.2007-ல் மாமன்றத் தீர்மானத்துடன் பிரேரணை அனுப்பி வைக்க கேட்டுள்ளார். எனவே திருமதி.ஜி.மலர்கொடி பல்நோக்கு சுகாதாரப் பணியாளரின் 7.2.2007-ம் தேதிய மனுவின் பேரில், மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதலுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு - 1) இந்த ஒருவழி பணிமாறுதலுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

2) அரசின் உத்தரவிற்கு பின் இந்த பணிமாறுதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் : 61**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 25) ம.பொ.4/15698/07

மதுரை மாநகராட்சி அண்ணாமாளிகை வளாகத்திற்குள் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பூங்காவின் உள்புறம் அமைக்கப்பட்டுள்ள படகுத்துறை தற்போது பராமரிப்பு செய்யப்பட்டு மீண்டும் இயங்கும் நிலையில் உள்ளதால், ஏற்கனவே ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தம் செய்தது போல் படகுத்துறை மூலம் வரும் வருவாயில் மாநகராட்சி 60% மற்றும் ஒப்பந்ததாரர் 40% என்ற அடிப்படையிலும், மாநகராட்சி ஒப்பந்த விதிகளை ஏற்று படகுத்துறையில் உள்ள நீரை சுத்திகரிப்பு செய்து பராமரிப்பு செய்யும் வேலையை ஒப்பந்ததாரரின் சொந்த செலவில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் டெண்டர்விட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 62**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 26) ம.பொ.5/ 1851 / 07

மதுரை மாநகராட்சி வார்டு எண்.58ல் மூலக்கரை மயான வளாகத்தில் நவீன எரியூட்டும் மயானம் (Gasifier Crematorium) அமைக்கும் வேலைக்கு 2006-2007-ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.96,15,000/-க்கு (ரூபாய் தொன்னூற்று ஆறு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட வேலைக்கு நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.382/நாள். 15.3.2007ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் நகராட்சி நிர்வாக ஆணையத்தில் மேற்படி வேலைக்கு திட்டம் II-ன்கீழ் (Part-II Scheme for 2006-2007) நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு அரசு மானியத்தில் பெறப்பட்ட தொகை ரூ.20.00/- லட்சம் போக எஞ்சியுள்ள தொகை ரூ.76.15/- லட்சத்தை டுபிட்கோ நிறுவனத்திலிருந்து கடன் பெற்று செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 63**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 27) ம.பொ.5/ 1852 / 07

மதுரை மாநகராட்சி வார்டு எண்.53ல் அனுப்பானடியில் அமைந்துள்ள காலியிடத்தில் புதிதாக நவீன முறையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆடுவதை செய்யும் இடத்திற்கு (Slaughter House) கட்டிடம் கட்டும் வேலைக்கு 2006–2007ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.75,00,000/-க்கு (ரூபாய் எழுபத்தைந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கு நிர்வாக ஒப்புதல் அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.383/நாள். 15.3.2007ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் நகராட்சி நிர்வாக ஆணையத்தில் மேற்படி வேலைக்கு திட்டம் II-ன்கீழ் (Part-II Scheme for 2006-2007) நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில்நுட்ப ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு அரசு மானியத்தில் பெறப்பட்ட தொகை ரூ.10.00/- லட்சம் போக எஞ்சியுள்ள தொகை ரூ.65.00/- லட்சத்தை டுபிட்கோ நிறுவனத்திலிருந்து கடன் பெற்று செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 64**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**28) B30/16714/07**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் கீழ்கண்ட எண்ணிக்கையில் தெருவிளக்குகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1) | 40வாட்ஸ் குழல் விளக்குகள் | : | 4174 எண்ணம் |
| 2) | 70வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | : | 457 எண்ணம் |
| 3) | 150வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | : | 516 எண்ணம் |
| 4) | 250வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | : | 717 எண்ணம் |
| 5) | 400வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | : | 18 எண்ணம் |
| 6) | உயர் கோபுர விளக்கு | : | 2 எண்ணம் |
| | **மொத்தம்** | : | **5884** |

மேற்கண்ட தெருவிளக்குகளில் தற்போது 325 மின் இணைப்புகள் அதாவது E.B service and Switchகள் உள்ளது. இந்த 325 சுவிட்சுகளும் பணியாளர்கள் மூலம் ON / OFF பணி செய்யப்பட்டு வருகிறது. ஒரு பணியாளர் சுமார் 45 சுவிட்சுகள் வரை ON / OFF பணியை செய்கின்றனர். மேற்கண்ட தெருவிளக்கு மின்கட்டணம் மாதம் சராசரியாக 6.76 லட்சம் ஆகிறது.

மின் கட்டணங்களை குறைப்பதற்கு குழல் விளக்கு மற்றும் சோடியம் ஆவிவிளக்குகளுக்கு பதிலாக Energy Saver Light Fitting மாற்றுவதற்கும் மேலும் தெருவிளக்கு மின் இணைப்பு சுவிட்சுகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒளிரவிடவும், குறிப்பிட்ட நேரத்தில் அணைக்கவும் Automatic Timer Switch தானியங்கி சுவிட்சு கன்ட்ரோல் சிஸ்டம் அமைப்பதற்கும் இதற்கான செலவினத்தை 12வது நிதி குழுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு டெண்டர் வரவழைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் : 65**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

**29) ம.பொ.6/ம.எ. 1448/06**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட அருள்மிகு.ஸ்ரீமீனாட்சியம்மன் திருக்கோவிலைச் சுற்றி அழகுப்படுத்தும் வேலை நான்கு சித்திரை வீதிகளுக்கு சிமெண்ட் கான்கிரீட் சாலையை Paver Block சாலையாக மாற்றி அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரின் அழகுப்படுத்தும் குழுவால் தீர்மானிக்கப்பட்டு, TNUIFSL ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டு, கீழ்கண்ட விபரப்படி TNUIFSL நிறுவன மதிப்பாய்வு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | கோப்பு எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1) | ம.பொ.6/ம.எ.1448/06 | வார்டு எண் 36 ல் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | திரு.ஆர்.ராமு | 24,89,070.00 |
| 2) | ம.பொ.6/ம.எ.1449/06 | வார்டு எண் 37 ல் பேவர் பிளாக் சாலை அமைத்தல் (பகுதி I ) | திரு.ஆர்.ராமு | 27,89,070.00 |
| 3) | ம.பொ.6/ம.எ.1550/06 | வார்டு எண் 37 ல் பேவர் பிளாக் சாலை அமைத்தல் (பகுதி II ) | திரு.ஆர்.ராமு | 24,89,070.00 |
| 4) | ம.பொ.6/ம.எ.1451/06 | வார்டு எண் 37 ல் பேவர் பிளாக் சாலை அமைத்தல் (பகுதி III ) | திரு.ஆர்.ராமு | 24,89,466.00 |
| 5) | ம.பொ.6/ம.எ.957/06 | வார்டு எண் 63ல் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல். | திரு.ஆர்.கண்ணன் | 15,50,705.00 |

மேற்கண்ட விபரப்படி ஒப்பந்தகாரர்களுக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் : 66**</u>

<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

**30) B12 / 1396/2000**

மதுரை மாநகராட்சியில் பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்து பணி ஓய்வுபெற்றவர்களுக்கும், காலமாகி உள்ள ஊழியர்களுக்கு வானாள் / குடும்ப ஓய்வூதியம் பெற்றுவரும் ஓய்வூதியர்கட்கும் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.579 நிதி (ஓய்வூதியம்) துறை நாள். 15.9.2006 உத்தரவில் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் மற்றும் தகுதியுள்ள வாரிசுதாரர்களுக்கும் 01.01.1960 முதல் 31.05.1988 முடிய பணி ஓய்வுபெற்ற / காலமானவர்களின் 1.6.1988 முதல் மாதாந்திர ஓய்வூதியத்தை மறு நிர்ணயம் செய்து

வழங்கப்பட வேண்டுமெனவும் ஓய்வூதியம் மறு நிர்ணயம் செய்யப்படுவதால் ஏற்படும் வித்தியாசத் தொகையினை சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்களுக்கு வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணைப்படி மதுரை மாநகராட்சியில் அனைத்து நிலை ஓய்வூதியர்கள் சுமார் 1648 பேர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் உத்தேசமாக ரூ.11,33,95,000/- (பதினொரு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் மட்டும்) ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகை உடனடியான வழங்கப்பட வேண்டுமென ஓய்வூதியர்களின் பல்வேறு சங்கங்களும் அரசு மட்டத்திலும் மாநகராட்சி மட்டத்திலும், எல்லா தரப்பிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இப்பெரும் தொகையை வழங்க மதுரை மாநகராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லை.

எனவே மேற்காணும்படி கணக்கிடப்பட்டுள்ள உத்தேச செலவினமான ரூ.11,33,95,000/-ஐ வழங்கக் கோரி கடந்த 7.5.2007ந் தேதியில் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிதியினை அரசினை அணுகிப் பெற்று, ஓய்வூதியதாரர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதியைக் கோரும் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 67**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 31) Jn.S.1/29943/ 06

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டங்கள் தயார் செய்து மத்திய & மாநில அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மத்திய & மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| 1) வைகை அணையிலிருந்து 600 மில்லியன் கன அடி நீர் குழாய் மூலம் எடுத்து சுத்திகரிப்பு செய்து மதுரைக்கு குடிநீர் வழங்கும் திட்டம் | - ரூ. 59.316 கோடி. |
| 2) நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படை வசதிகள் செய்து மேம்பாடு செய்தல் மதுரை மாநகராட்சியில் உள்ள 21 குடிசைப் பகுதிகளில் 2515 குடிசை வீடுகளை கான்கிரீட் கூரை வீடுகளாகவும் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல். | - ரூ. 26.85 கோடி. |
| 3) நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படை வசதிகள் செய்து மேம்பாடு செய்தல் மதுரை மாநகராட்சியில் உள்ள 58 குடிசைப் பகுதிகளில் 9563 குடிசை வீடுகளை கான்கிரீட் கூரை வீடுகளாகவும் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் | - ரூ. 103.57 கோடி. |
| 4) வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அணைகள் அமைத்தல் | - ரூ. 4.77 கோடி. |
| 5) திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | - ரூ. 74.29 கோடி. |
| 6) அனைத்து பகுதிகட்கும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைத்தல் | - ரூ. 256.87 கோடி. |

மேற்கண்ட திட்டங்கள் மத்திய அரசு 50% மானியமாகவும், மாநில அரசு 20% மானியமாகவும், மாநகராட்சி பங்குத் தொகையாக 30% ம் மத்திய அரசு மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது TUFIDCO நிறுவனத்தினர் திடக்கழிவு மேலாண்மை மற்றும் தடுப்பணை அமைத்து குடிநீர் ஆதாரங்களை பெருக்குதல் ஆகிய திட்டங்களுக்கு மாநில அரசு மான்யமாக வழங்குவதற்கு பதிலாக 20% வட்டியில்லா கடனாக அனுமதித்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மாநகராட்சியில் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் மேலும் 20% கடனாகப் பெற்று நிறைவேற்ற இயலாது. எனவே ஏற்கனவே திட்டத்தில் ஒப்புதல் அளித்த படி 20% மாநில அரசுத் தொகையை முழு மான்யமாக வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 68**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 32) Jn. S.1/29943/06

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைக்க மத்திய அரசின் 20.04.2007 ம் தேதிய கூட்டத்தில் மதுரை மாநகராட்சிக்கு ரூ. 25687.00 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (இத்தொகையில் மத்திய அரசு 50% மானியமும், மாநில அரசு 20% மானியமும் மாநகராட்சி பங்குத் தொகையாக 30% வழங்கப்பட்டுள்ளது) இத்தொகையில் மழைநீர் வடிகால் அமைக்கவும், புதுப்பிக்கவும் வாய்க்கால்களை தூர் வாரி புதுப்பிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொகை ரூ. 25687.00 இலட்சம் ஒப்புதல் பெற்ற விபரம் மற்றும் அந்தந்த இனங்களுக்கு தகுந்தவாறு தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்,

தொழில்நுட்ப ஒப்புதல் நடவடிக்கை மேற்கொள்ளவும், மாநகராட்சி பங்குத் தொகை 30% சதவீதத்தை TUFIDO நிதி நிறுவனத்தில் கடன் பெற்று நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>தொகை பங்களிப்பு விபரம் :</u>**

1. மத்திய அரசு மானியம் - 50%
2. மாநில அரசு மானியம் - 20%
3. மாநகராட்சி பங்குத் தொகை - 30%

(பங்குத் தொகை நிதி நிறுவனம் மூலம் கடன் பெற்று நிறைவேற்றப்படும்)

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 69</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

## 33) C.W.3/34162/2006

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை, வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாப்பு பணிக்கு திரு. பி. பழனிச்சாமி, டெக்ஸ்கோ பணியாளர் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் (On Contract Basis) சார்ஜெண்டாகப் (Sergent) பணியாற்றி தமிழ்நாடு முன்னாள் இராணுவனத்தினர் கழகம் லிட்., (Texco) நிறுவனம் மூலம் சேவை செய்து தற்போது பணியேற்பாட்டின்கீழ் உள்வட்ட சுற்றுச்சாலை காவலராக பணிமாறுதல் செய்யப்பட்டு அன்னாருக்கு பதிலாக திரு.வி.வி.மீனாட்சிசுந்தரம் டெக்ஸ்கோ பணியாளர் (ஈ.கோ பார்க்) வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக பணியாற்றி வருவதால் ஏற்கனவே வழங்கி வரும் சேவை கட்டணம் அடிப்படையில் **1.10.2006** முதல் **30.9.2007** வரை மேலும் ஓராண்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக டெக்ஸ்கோ பணியாளரின் சேவையை பயன்படுத்துவதற்கும் அதற்கான செலவினத்தை ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : **1)** ஏற்கனவே **30.9.2006** முடிய சேவை செய்யும் அதற்கான செலவினத்தை ஏற்றுக்கொள்ளவும், மாமன்றத் தீர்மான எண்.**259**, நாள்: **1.9.2005**–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் மொத்த செலவு ரூ.**78,312**/-

**2)** **1.10.2006** முதல் ஒரு வருடத்திற்கு மேற்கண்ட சேவையை நீட்டிப்பு செய்து கொள்ள ஒப்பந்தப்பத்திரம் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

**3)** **1.10.2006** முதல் **30.9.2007** முடிய சேவைக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5,484/- மற்றும் வரிகள் உட்பட மாதம் ஒன்றுக்கு மொத்தம் ரூ.**6இ526,–** வீதம் ஓராண்டுக்கு ரூ.78,312/- செலவு ஏற்படும்.

**4)** ம.நி.2/23177/06 எண். **27.10.2006**–ம் தேதிய குறிப்பாணையில் ஏற்கனவே பணியாற்றி வந்த திரு.பி. பழனிச்சாமி, டெக்ஸ்கோ பணியாளருக்கு பதிலாக திரு.மீனாட்சிசுந்தரம், ஈகோ பார்க் டெக்ஸ்கோ பணியாளரை வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக பணிமாறுதல் செய்யப்பட்டு, தற்போது பணியாற்றி வருகிறார்.

**5)** மேற்கண்ட குறிப்பாணையில் மேற்கண்ட பணியாளர்களுக்கு உரிய மாதாந்திர சேவைக் கட்டணத்தை ஏற்கனவே வழங்கி வந்த பிரிவிலேயே வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை மாற்றம் செய்து. ம.நி2/23177/06, **19.12.2006**–ம் தேதிய கடிதத்தில் திரு.வி.வி.மீனாட்சிசுந்தரம் டெக்ஸ்கோ பணியாளருக்கு மாமன்றப்பிரிவிலேயே சேவைக் கட்டணம் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 70</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

## 34) B30/16715/07

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணியில் குறித்த நேரத்தில் மாலையில் தெருவிளக்குகளை ஒளிரவிடவும் காலையில் குறித்த நேரத்தில் அணைக்கவும் பொது மக்களின் நலன் கருதி ஒரே நேரத்தில் எரியவிடவும் அனைக்கவும் பணியாளர் மூலம் செய்ய இயலாது ஏனெனில் ஒரு பணியாளர் சுமார் **45** சுவிட்சுகளை ON/OFF செய்வதால் சுவிட்சுகள் அரைமணி நேரத்திற்கு முன்பாக ON செய்ய ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இதனால் மின்துப்ப்பு உபயோகம் அதிகமாவதுடன் மாநகராட்சி பணம் விரயமாகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக வடக்கு மண்டலத்தில் மின் சேமிப்பு கருவி மூலம் (Energy Saver (BOT Method) GSM Technology பயன்படுத்தி தானியங்கி சுவிட்சுகள் செயல்படுத்தப்பட்டு சராசரியாக **30** சதவீதம் மின் சேமிப்பு மிச்சப்படுத்தப்படுகிறது.

வடக்கு மண்டலத்தில் அமுல்படுத்தியுள்ள GSM Technology முறையில் தெற்கு மண்டலத்திலும் Energy Saver System (BOT) முறையில் தனியார் நிறுவனம் மூலம் நிறைவேற்றலாம் இதனால் மாநகராட்சிக்கு எவ்வித கொள்முதல் மற்றும் சுவிட்சுகளுக்கான பராமரிப்பு செலவுகள் இல்லை.

கடந்த **25.04.07** ம் தேதியன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் தெற்கு மண்டலத்தலைவர் பேசுகையில் வடக்கு மண்டலத்தில் அமுல்படுத்தியுள்ள Energy Saver System (BOT Method) I போல்

தெற்கு மண்டலம் தெருவிளக்கு மின் இணைப்புகளுக்கும் தானியங்கி சுவிட்சு கன்ட்ரோல் சிஸ்டம் பொருத்துமாறு கோரியுள்ளார்.

எனவே தெற்கு மண்டலம் தெருவிளக்குகளை குறித்த நேரத்தில் மாலையில் ஒளிர விடவும் காலையில் அணைக்கவும் தெருவிளக்கு பராமரிப்பு மின்சக்தி சேமிப்பு கருவிகளை நிறுவி அமுல்படுத்தவும், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு (BOT) முறையில் டெண்டர் வரவழைத்து செயல்படுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 71**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 35) மே.ம.பொ.2 / 05331 / 2007

மதுரை மாநகராட்சி வார்டு 28, எஸ்.எஸ்.காலனி பகுதியில் பொன்மேனி கிராமம் R.S.எண். 57/2B.S. B O A- II காலனியில் அடங்கிய அங்கீரிக்கப்பட்ட மனைப்பிரிவில் குழந்தைகள் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு பகுதியில் மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு கிளை நூலகம் ஒன்று கட்டுவதற்கு காலிமனை வேண்டி 5.7.2007-ல் மனுச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி குழந்தைகள் பூங்கா இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு L.P.H./Dy DTP (MR) No.4/73 (L.O. எண் 404) -ல் அமைகிறது.

மேற்படி காலனியில் குடியிருப்போர் சங்கத்தினர் ஏற்கனவே இந்த இடத்தை மதுரை மாநகராட்சிக்கு தாங்கள் ஒப்படைத்து விட்டதாகவும், நூலகம் கட்டுவதில் தங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது மேற்படி பூங்கா இடம் உபயோகமற்று காலியிடமாக உள்ளதால் வடக்குப் பகுதியில் $\frac{110 + 100}{2} \times \frac{33 + 30}{2}$ அளவில் 3307 சதுரஅடி (சுமார் 7 சென்ட்) இடத்தில் கிளை நூலகம் கட்டிக்கொள்ள மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 72**

**நூலக துறைக்கு மாநகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய நூலக வரித்தொகையில் இந்த இடத்திற்கான கிரயத் தொகையை கழித்துக் கொண்டு, இந்த இடத்தை நூலகத்துறைக்கு வழங்க தீர்மானிக்கிறது.**

## 36) A3/31285/07

மதுரை மாநகராட்சியின் வில்லாபுரம் நடுநிலைப்பள்ளி முறையே மாதாந்திர வாடகை கட்டணத்தில் திரு.வெயிலுமுத்து அவரின் மனைவி திருமதி. வி. ராஜேஸ்வரி என்பவர்களுக்கு சொந்தமான கட்டிடத்தில் முறையே ரூ.2215/-, ரூ.5429/- என்ற மாதாந்திர கட்டணத்தில் உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்டு மேற்படி பள்ளி இயங்கி வருகிறது.

இந்த வாடகைக் கட்டணம் மதுரை மாநகராட்சியின் ஆரம்ப கல்வி நிதியிலிருந்து **01.04.2000**ம் தேதி முதல் கடந்த 7 ஆண்டுகளாக செலுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மேற்படி பள்ளி கட்டிடத்தின் உரிமையாளரின் **21.9.2005**ம் தேதிய கடிதத்தில் வாடகை கட்டணத்தை கடந்த 7 ஆண்டுகளாக கட்டணம் உயர்த்தப்படவில்லையாதலால் உயர்வு செய்து கொடுக்கும்படி கோரிய மனு பரிசீலிக்கப்பட்டது. இதனடிப்படையில் மாநகராட்சி பொறியாளர் நிர்ணயம் செய்த வாடகை முறையே,

| பள்ளிக் கட்டிட உரிமையாளரின் பெயர் | தற்போதுள்ள வாடகை ரூ. | 01.01.2007ந் தேதி முதல் உயர்வு செய்யப்பட்டுள்ள வாடகை |
|---|---|---|
| திரு. வெயிலுமுத்து | ரூ.2215/- | ரூ.3400/- |
| திருமதி.வி.ராஜேஸ்வரி | ரூ.5429/- | ரூ.7600/- |

மேற்கண்டவாறு மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாதாந்திர வாடகை கட்டணத்தை **01.01.2007** முதல் மேற்கண்ட மாநகராட்சி பள்ளி செயல்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிட உரிமையாளர்களுக்கு **01.01.2007** முதல் வழங்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 73**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 37) ந.பொ.1/ 05735 / 2000

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் - II (TNUDP – II) மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார திட்டம் + வாம்பே - ன் வழங்கப்பட்ட மானிய உதவியால் மதுரை மாநகராட்சியில் 28 இடங்களில் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட அனைத்து சுகாதார வளாகங்களுக்கும் உரிய செலவுத் தொகையை ஈடு செய்யும் படிவங்கள் (Reimpursement Proposals) தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு திரும்ப வழங்கும் படி கோரப்பட்டது. இது சம்பந்தமாக கீழ்க்கண்ட நான்கு இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்களுக்குரிய மைக்ரோலெவல் தொழில் நுட்ப தணிக்கை அறிக்கை

சமர்ப்பிக்கவில்லையென்று தெரிவித்து செலவு ஈடு செய்யும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையென தெரிவிக்கப்பட்டது. 1) பொன்னகரம்.
2) தைக்கால் தெரு.
3) அந்தனேரி.
4) வாழை தோப்பு.

மேற்கண்ட நான்கு இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்களுக்குரிய தொழில் நுட்ப அறிக்கையை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து செலவுத் தொகை திரும்ப வழங்க கோரிய நேரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் - II க்குரிய அலுவலகம் மூடப்பட்டது (Wound up). இந்நிலையில் மேற்கண்ட நான்கு சுகாதார வளாகங்கள் கட்டுவதற்காக தமிழ்நாடு நகர நிதி உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தினரால் (TUFIDCO) வழங்கப்பட்ட முன்பணத் தொகையை திரும்ப வழங்கும் படி கோரியது.

மேற்கண்ட சுகாதார வளாகங்கள் அமைந்துள்ள பகுதி அடிப்படை வசதிகளற்ற பகுதிகளாகும் என்பதையும், உஃ சுகாதார வளாகங்களை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொண்டிருப்பதையும் கருத்தில் கொண்டு உஃ நான்கு சுகாதார வளாகங்களுக்குரிய செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், தமிழ்நாடு நகர நிதி உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தால் வழங்கப்பட்ட முன் பணத் தொகையை திரும்ப செலுத்துவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி கோரப்பட்டது. இது சம்பந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு உத்தரவு கடிதம் ந.க.எண். 40566/2002/UPA – 2, நாள். 19.04.07 ன் மூலம் மேற்கண்ட நான்கு இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்களுக்குரிய செலவுத் தொகை ரூ. 8,73,559/- யை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிப்பதற்கும், முன் பணத் தொகை ரூ. 7,84,163/- யை தமிழ்நாடு நகர நிதி உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக (TUFIDCO) த்திற்கு திரும்ப செலுத்துவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதி அளிக்கப்பட்டவாறு மேற்கண்ட நான்கு சுகாதார வளாகங்களுக்குரிய செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், முன் பணத் தொகையை தமிழ்நாடு நகர நிதி உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக (TUFIDCO) த்திற்கு திரும்ப செலுத்துவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு :** நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதிக்கப்பட்ட செலவு விவர அறிக்கை கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 74**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 38) B4/15702/01

மதுரை மாநகராட்சி மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் அரசு ஆணையின்படி கடந்த **01.04.2000** முதல் புதிய கணக்கு முறை திட்டம் (Accrual Based New Accounting System) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இம்மாநகராட்சியில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், மாநகராட்சியின் கோரிக்கையின்படி தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் (TNUDP) திட்ட அலுவலரின் **23.05.2001–**ம் தேதிய கடிதத்தின் (கடிதம் எண். பி.எம்.யூ./எப்.எஸ்./**2001**) பேரிலும், ஏற்கனவே இம்மாநகராட்சிக்கு புதிய கணக்குத் திட்டத்திற்கு ஆலோசகராக இருந்து வந்த வேல்முருகன் அன்கோ சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் நிறுவனத்தின் பரிந்துரையின்பேரிலும், திரு. எம்.முருகேசன் (CA) **2000–2001** முதல் நியமிக்கப்பட்டு ஆலோசகராகப் பணிபுரிந்து வருகிறார்.அன்னாருக்கு ஆலோசனை கட்டணமாக (Remuneration) மாதம் ஒன்றிற்கு ரூ.5000/- வீதம் வழங்கவும், அதனை காலாண்டுக்கு ஒருமுறை TNUDP திட்ட அலுவலகத்திலிருந்து மீளப்பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், அன்னாருக்கு மார்ச் **2001** முதல் ஆகஸ்ட் **2001** வரை **6** மாத காலங்களுக்கு ரூ.30,000/- (Remuneration) வழங்கப்பட்டது. மேற்படி தொகையும் TNUDP திட்ட அலுவலகத்திலிருந்து **27.12.2001–**ல் மீளப்பெறப்பட்டது. மேற்கண்ட ஆலோசகர் பணி தொடர்ந்து தேவைப்பட்டதால், மேற்படி ஆலோசகர் தொடர்ந்து மைய கணக்கு பிரிவில் பணியாற்றி வர பணிக்கப்பட்டு, அன்னார் செப்டம்பர் **2001** முதல் பணியாற்றி வந்ததால் அன்னாருக்கு செப்டம்பர் **2001** முதல் ஜனவரி **2002** முடிய **5** மாத காலத்திற்கு வழங்கப்பட்ட ஆலோசனைக் கட்டணத் தொகை ரூ.25,000/- யை மீளக் கோரியதில், TNUDP திட்ட இயக்குநரின் **8.4.2002** மற்றும் **25.7.2002–**ம் தேதிய கடிதங்களில் ஆறுமாதங்களுக்கு மேல் கட்டணம் மீளப்பெற இயலாது என்றும், கூடுதலான காலங்களுக்கு ஆலோசகரின் பணி தொடர்ந்து தேவையிருப்பின் மன்றத்தின் உரிய ஒப்புதலுடன், அதற்கான தொகையை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் **2001–2002**ம் ஆண்டு வருடக் கணக்கு முடிக்க ஆலோசகரின் பணி அவசியம் தேவை எனக்கருதி ஆலோசகரின் பணியை பயன்படுத்தி **2001–2002**ம் ஆண்டு வரை வருடக் கணக்கும் முடித்து மாநகராட்சி தணிக்கைக்கு அனுப்பப்பட்டது. மேலும் இதுவரை மாதாந்திர கணக்குகள் முடிக்கப்பட்டு மாதாந்திர ஐந்தொகைகள் (Trial Balance) அவ்வப்போது தணிக்கைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு ஆலோசகரின் பயன்பாடு தொடர்ந்து தேவைப்படுவது குறித்து CMA அலுவலகத்திலிருந்து விபரம் கோரப்பட்டதில் (CMA அலுவலகம்) நிதி ஆலோசகரின் **22.4.2003–**ம் தேதிய கடிதத்தில் ஒரு நகராட்சிக்கு **2** ஆலோசகராக மாதம் ஒன்றுக்கு ஒரு ஆலோசகருக்கு ரூ.**2500/-** வீதம் ஐந்து மாதங்கள் வரை நியமித்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு ஆலோசர்களுக்கு பதிலோக ஒரே ஆலோசகரை ரூ.**5000/-** கட்டண விகிதத்தில் பயன்படுத்திக் கொள்வது நடைமுறைக்கு எளிமையாக இருந்தமையாலும், வருடக் கணக்கு முடித்து தணிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பின் தணிக்கையில் சுட்டிக் காட்டப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும் ஆலோசகரை தொடர்ந்து பயன்படுத்தி வருவதாலும், நநி. ஆணையாளரின் **17.8.2005** செயல்முறை ஆணை எண். 15620/2003/L2-ன்படி **2004–2005**ம் ஆண்டு வரை கணக்குகளை முடிக்க **31.5.2006** வரை ஆலோசகரை ஒப்பந்த அடிப்படையில் நீடித்து வைத்துக் கொள்ள ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் தொடர்ந்து பெற்று செப்டம்பர் **2001** முதல் **31.5.2006** வரையிலும் அன்னாருக்கு கட்டணமும் வழங்கப்பட்டது. தற்பொழுது உள்ள கணக்கு ஆலோசகர் நல்ல முறையில் கணக்குகளை பார்த்து ஐந்தொகை கணக்கு முடித்து தணிக்கைக்கு அனுப்பி வைக்கப்படுவதால் அன்னாருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.**5000/-** வீதம் **31.03.2007** வரை மாநகராட்சியில் வைத்துக் கொள்ள மாமன்றத் தீர்மானம் எண்.**30**, நாள் **29.6.2006**ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

தற்சமயம் மாநகராட்சியின் ஆண்டுக் கணக்குகள் **2004–2005** வரை தணிக்கை அனுப்பப்பட்டதாலும், மேலும் **2005–2006** & 2006-2007-ம் ஆண்டு கணக்குகள் எல்லா மண்டலங்களில் இருந்து பெற்று ஒருங்கிணைத்து ஆண்டுக் கணக்குகள் முடிக்க வேண்டியுள்ளதால் ஆலோசகரின் பயன்பாடு தொடர்ந்து தேவைப்படுவதாலும், அன்னாருக்கு **2001–**ம் ஆண்டிலிருந்து **31.3.2007** வரை ஆலோசனைக் கட்டணம் ரூ.**5000/-** மட்டும் வழங்கப்படுவதால், அன்னாரின் கோரிக்கை மறுபரிசீலனை செய்து, அன்னாருக்கு ஆலோசனைக் கட்டணம் ரூ.**7500/-** வழங்கவும், **1.4.2007** முதல் தொடர்ந்து ஆண்டுக் கணக்கு முடியும் வரை ஆலோசகராக மாநகராட்சியில் பணிபுரிவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 75**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**39) ம.தி.2/16294/07**

மதுரை மாநகராட்சி வார்டு 25, சர்வே வார்டு-5, பிளாக் எண்.33, டி.எஸ்.நம்பர். 116 (பழைய டி.எஸ். எண்.997 பகுதி) சுமார் 20 செண்ட் நிலத்தை கரிமேடு காவல் நிலையம் கட்ட வேண்டி தடையின்மை சான்று வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் கோரியுள்ளார். இந்த இடம் மதுரை மாநகராட்சி டிவிசன் அலுவலகம் வரி வசூலிப்பு மையம் ஆகியவைகள் கட்ட இடம் தேவைப்படுவதால், பட்டா வழங்க மார்க்கமில்லை என்ற விபரத்தை மாமன்றத்தீர்மானத்துடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தெரிவிக்கவும், பிரஸ்தாப நிலம் சர்வே ஆவணங்களில் மயானம் என உள்ளது. மேற்படி இடத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சுமார் 25 பேர்களுக்கும் மேல் கட்டிடம் கட்டி ஆக்கிரமிப்பாக குடியிருந்து வந்தவர்கள், கடந்த பிப்ரவரி 2004-ல் பிறப்பிக்கப்பட்ட உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுப்படி, மதுரையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது இந்த நிலத்தில் இருந்த ஆக்கிரமிப்புகளும் இடித்து அகற்றப்பட்டது. தற்போது இந்த இடம் காலியாகவே உள்ளது. இந்த இடம் தென்புறத்தில் படித்துறை சாலையும், வடப்புறத்தில் வைகை தென்கரை சாலையும் அமைந்துள்ள ஒரு நல்ல இடமாகும். எனவே மாநகராட்சியின் பிற்கால பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தினை கொண்டு, தனிநபர்களுக்கு பட்டா வழங்க மார்க்கமில்லை எனவும், பிரஸ்தாப இடத்தை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவும், மாவட்ட ஆட்சித்தலைவரை கோர மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 76**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**40) ம.வ.2/ 6910 / 07**

மதுரை மாநகராட்சி வார்டு **26**, ஞானஒளிவுபுரம் மாநகராட்சிக் குடியிருப்புக்கு அருகில் சர்வே எண். **5**, பிளாக் எண். **56**, டவுன் சர்வே **61**, பழைய சர்வே எண். 989/1–ல் 20'x20' அளவுள்ள மாநகராட்சிக்கு பாத்தியப்பட்டுள்ள இடம் காலியாக உள்ளது. மேற்காணும் இடம் காலியாக உள்ளதால் தனியார் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. இதனால் அடிக்கடி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு வரும் நிலை ஏற்படுகிறது. ஏனவே மேற்காணும் 20'x20' இடத்தை வருவாய் ஈட்டக்கூடிய பயனுக்கு பயன்படுத்தவும், ஏலம் மற்றும் டெண்டர் மூலம் மேற்படி இடத்தினை வாடகை அடிப்படையில் வழங்க மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 77**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 41) ம.நி.5/7350/07

மதுரை மாநகராட்சி தமுக்கம் கலையரங்கத்தை குருநாதர் சங்கரதாஸ் சுவாமிகள் குருபூஜை விழா மற்றும் 85-ம் ஆண்டு சங்க ஆண்டுவிழாவும் 13.11.2007-ம் தேதி ஒரு நாள் மட்டும் வாடகையின்றி நடத்துவதற்கு இலவசமாக வழங்குமாறும், இதுபோல் வருடந்தோறும் நவம்பர் 13-ல் கலையரங்கத்தை இலவசமாக வழங்க வேண்டுமென துணைத்தலைவர் தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத்திலிருந்து கோரியுள்ளார். மாமன்றத் தீர்மானம் எண்.31, நாள்.28.5.2004-ல் நிர்ணயிக்கப்பட்ட வாடகை அடிப்படையில் கலையரங்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இலவசமாக கலையரங்கத்தை வழங்கிட மாநகராட்சி விதிகளில் இடமில்லை. தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத்தினரின் 6.3.2007ம் தேதிய கோரிக்கையினை மாமன்றத்தின் முன் வைத்து முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 78**

**சிறப்பு இனமாக கருதி, இந்த ஆண்டு நவம்பர் 13 ஒரு நாள் மட்டும் இலவசமாக வழங்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 42) பி.30/ 16846 / 2007

மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ், குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு டிரை சைக்கிள் அவசியத்தை கருதி, வார்டுகளில் டிரை சைக்கிள்கள் பழுதடைந்து இருப்பதால் அவற்றை சரிசெய்ய ஒவ்வொரு வார்டு சுகாதார ஆய்வாளர்களுக்கும் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) கையிருப்பு பணம் (Imprest) வழங்கலாம் என சுகாதாரக்குழு மற்றும் வேலைக்குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி, வார்டுகளில் டிரை சைக்கிள் ரிப்பேர் சரிசெய்ய ஒவ்வொரு வார்டு சுகாதார ஆய்வாளருக்கு ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) முன்பணம் கையிருப்புப் பணம் (Imprest) வழங்கலாம் எனத் தெரிவித்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 79**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 43) JN S1/23312/07

மத்திய அரசின் பொதுப்பணித்துறை மேலாண்மை இயக்குநர் (Director General) அவர்களிடமிருந்து 03.07.07 பெறப்பட்ட கடிதத்தில் நவம்பர் மாதம் 12ம் தேதியிலிருந்து 14ம் தேதி வரை புதுடில்லியில் சர்வதேச பொறியாளர்களின் கூட்டமைப்பின் ஆதரவுடன் இந்திய பொறியாளர்கள் கழகம் (Institute of Engineers India) மூலம் "வளர்ந்து வரும் நாடுகளின் நகர்புற உட்கட்டமைப்பு தொடர்பான சர்வதேச மாநாடு" (World Congress on Urban Infrastructure in Developing Countries Under the aegis of world Federation of Engineering organizations) நடைபெறவுள்ளது என்றும் இம்மாநாட்டிற்கு மதுரை மாநகராட்சியின் பங்களிப்பு தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம் கொடுக்கும் படியும் கேட்டு கொண்டுள்ளது. ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியால் சமர்ப்பிக்கப்படும் கட்டிடங்கள், சாலைகள் முதலான திட்டங்களுக்கு உரிய திட்ட மதிப்பீடு புதுடில்லியில் உள்ள மத்திய அரசின் பொதுப்பணித்துறை மூலம் உரிய ஆலோசனைகளை வழங்கப்பட்டு வருவதாலும், மேற்படி சர்வதேச மாநாட்டிற்கு மதுரை மாநகராட்சியின் பங்களிப்பு தொகையாக ரூபாய் இரண்டு இலட்சத்தை ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற திட்டத்திற்கு மத்திய அரசால் இதுவரை மதுரை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து ரூபாய் இரண்டு இலட்சம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டது. ஏற்கனவே பெறப்பட்டுள்ள முன் ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 80**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 44) JNS1/29943/06

மத்திய அரசின் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் மழைநீர் வடிகால் அமைக்க மத்திய அரசின் NOK – 14012/2/2006 –NURM நாள் : 26.4.07 மற்றும் மாநில அரசின் Lr.No.TUFIDCO/JNNURM/AM(M)2007 நாள் : 02.05.07ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை ரூபாய். 256.87கோடி.

மேற்கண்ட திட்டத்திற்கு மத்திய அரசு பங்களிப்பு 50% , மாநில அரசு பங்களிப்பு 20%, மற்றும் மாநகராட்சி பங்களிப்பு தொகை 30% என்ற விகிதத்தில் அனுமதியள்ளதுள்ளனர். மாநகராட்சி பங்கு தொகை 30% சதவீதத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிறுவனத்தினரிடமிருந்து (TUFIDCO) கடனாக பெற்று நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 81**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**45) JN S1/33923/06**

மத்திய அரசின் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வைகை ஆற்றின் குறுக்கே மேலக்கால், கோச்சடை, திருப்புவனம் ஆகிய மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு பங்களிப்பு 50% வீதம், மாநில அரசு 20% வீதம் மற்றும் மாநகராட்சி பங்களிப்பு 30% வீதம்.

மத்திய அரசு தடுப்பணைகள் கட்டும் திட்டத்திற்கு ரூ.4.77 கோடிக்கு 02.02.07ம் தேதியன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசு அரசாணை எண் 57(2D) நாள் : 30.03.07ல் மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேலும் மாமன்றத் தீர்மானம் எண் 27, நாள் : 25.04.07ல் மாநகராட்சி பங்களிப்பு தொகை 30% வீதத்தை அரசு சார்ந்த நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாக வாங்க மாமன்ற தீர்மானத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது. தற்பொழுது மேற்கண்ட 30% வீதம் தொகையை TUFIDCO தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிறுவனத்திடமிருந்து கடனாக பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 82**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**46) JNS1/32922/06**

மத்திய அரசின் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் நகர்புற குடிசை பகுதிகளை மேம்படுத்துவதற்கு பகுதி 1ல் 21குடிசை பகுதிகளை அபிவிருத்தி செய்ய ரூபாய் 26.86 கோடி மதிப்பீட்டிற்கு மத்திய அரசால் 02.02.07ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. பகுதி 2ல் 58 குடிசை பகுதிகளை அபிவிருத்தி செய்ய ரூ.103.57 கோடி மதிப்பீட்டிற்கு மத்திய அரசால் 28.02.07ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 25.06.07ம் தேதிய கடிதத்தில் குடிசை பகுதிகளை எவ்வாறு தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற வழி முறைகளை மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 83**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**47) JNS1/27913/06**

மத்திய அரசின் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மாநில அரசின் அரசாணை எண் (D) 160 நாள் : 17.04.07ம் தேதிய உத்தரவின் படி கீழ்க்கண்ட திட்டங்களுக்கு தமிழ்நாடு (TNUIFSL) நகர்புற உள்கட்டமைப்பு சேவை கழகத்திடம் மாநகராட்சி பங்குத் தொகை 30% வீதத்தை கடனாக பெற்று நிறைவேற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | திடக்கழிவு மேலாண்மை | 75.31 கோடி |
| 2) | சென்ட்ரல் மார்கெட் மாற்றி அமைத்தல் | 58.00 கோடி |
| 3) | அடுக்குமாடி வாகன காப்பகம் அமைத்தல் | 7.60 கோடி |

மேற்கண்ட திட்டங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு, வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குவதற்கு ஆகும் செலவு தொகையில், மாநகராட்சி பங்குத் தொகையான 30% வீதத்தை 12வது நிதிக்குழு மானியத்தில் பெறப்படும் நிதியிலிருந்து நிறைவேற்றவும், மேலும் உரக்கிடங்கு மற்றும் நவீன முறையில் சேனிட்டரி லேண்ட் பில் நிறுவுவதற்கு ஆகும் செலவுத் தொகையில் மாநகராட்சி பங்குத் தொகையான 30% வீதத்தை (Public private participation) தனியார் பங்களிப்புடன் பெற்று நிறைவேற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதால், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு கடன் பெற தேவையில்லை என்றும், மற்ற இரண்டு திட்டங்களுக்கும் மாநில அரசின் உத்தரவு ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 84**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**48) ந.பொ.1/ 03986/99**

தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளில் முதல் மூன்று கட்டப்பணிகள் (Phase I to III) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலமும், நான்காம் கட்ட (Phase IV) பணிகள் பொதுப் பணித்துறை மூலமும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மூன்றாம் கட்ட பணியாக அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.10.15 கோடி மதிப்பீட்டு தொகையில் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் சுத்திகரிப்பு நிலையம் மிகவும் பழமையான (Waste Stabilization Pond) முறையில் சுத்திகரிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே பழமையான முறையில் அமைக்கப்பட்ட அவனியாபுரம் சக்கிமங்கலம் சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்காமல் உள்ளது. மேலும் இந்த பழமையான முறையில் சுத்திகரிப்பு செய்ய கூடுதலாக இடம் தேவைப்படுவதாலும், சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரானது மறு உபயோகத்திற்கு உபயோகப்படுத்தமுடியாத காரணத்தினாலும், இம்முறையில் சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரின்

B.O.D அளவு 10 PPMக்கு மேல் இருப்பதாலும் மற்ற மாநிலத்தில் செயல்படுத்துவது போல் நவீன முறையில் Cyclic Activated Sludge (CASP) (சிடெக்) முறையில் செயல்படுத்தும் பொருட்டு ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள ரூ.231.07 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து மத்திய மாநில அரசு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியத்தினரால் மேற்கொள்ளப்படும் மூன்றாவது கட்டப் பணி திட்டத்தை கைவிடும்படியும், இதற்காக பெறப்பட்ட நிதியினை மத்திய அரசுக்கு திரும்ப செலுத்தும்படியும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியத்தினை கோருவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 85**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 49) Jn.S1/18492/07

மதுரை மாநகராட்சி வைகை இரண்டாவது குடிநீர் திட்டம் செயலாக்கத்தின் துவக்க நிலையிலேயே குள்ளப்புரம், அ. வாடிப்பட்டி மற்றும் பண்ணைப்பட்டி ஊராட்சி மக்கள் தங்கள் பகுதியில் குடிநீர் மிகவும் பற்றாக்குறையாக உள்ளது என்றும் வைகை இரண்டாவது குடிநீர் திட்டத்திலிருந்து விஸ்தரிப்பு செய்து கொடுக்கும் பொருட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் இதற்கான ஒரு அமைதிக்குழு கூட்டம் வைகை அணை தலைமையிடத்தில் கண்காணிப்பு பொறியாளர் / த.கு.வ.வா / மதுரை மற்றும் கண்காணிப்பு பொறியாளர் மதுரை மாநகராட்சி தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் பண்ணைப்பட்டி கிராம ஊராட்சி மக்களுக்கு ஒரு குழாய் மட்டும் சுத்திகரிப்பு நிலைய மேல் நிலைத் தொட்டியிலிருந்து நீட்டிப்பு வேண்டி ஊராட்சி மன்றத் தலைவரின் மனு பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஒரு குழாய் இலவசமாக அமைத்து குடிநீர் வசதி செய்து தர அரசின் ஒப்புதல் பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 86**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 50) ந.பொ.1/24427/07

தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சி பகுதிகளில் முதல் இரண்டு கட்ட (Phase I & II) பாதாள சாக்கடை திட்டப் பணிகள் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினால் (CMWSSB) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் முதல் கட்ட பணிகள் முடிவுபெற்றும், இரண்டாம் கட்ட பணிகள் முடிவுறும் நிலையிலும் உள்ளது. இப்பாதாள சாக்கடை திட்ட பணிகளை மாநகராட்சி ஏற்றுக்கொள்ளவதற்காக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு மூன்றாவது நபர் ஆய்வு செய்து கொடுக்க (3rd Party Inspection) தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்வதற்கும், இதற்காகும் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 87**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 51) மதி2/ 20426/ 07

மதுரை மாநகராட்சி வார்டு **29**, சர்வே வார்டு **5** புல எண்.**1599**/2A (ப), **1600**(ப) மற்றும் **1601**/3(ப) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ம.வ./ம.(ம.ம) எண்.**44/85**ல் மனைப்பிரிவு ஒப்புதல் செய்யப்படும் போது சமுதாய உபயோகத்திற்காக 5570.35 ச.மீ. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் சுமார் **1670.25** ச.மீ. அளவுள்ள இடத்தை சமுதாய உபயோகத்திலிருந்து வணிக உபயோகம் மற்றும் பொது உபயோகமாக மாற்றம் செய்ய தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கோரியதன் பேரில் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம் ந.க.எண்.3069/2007/எல்.ஏ.1, நாள்.10.4.2007 கடிதத்தில் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் பெற்று அனுப்பிவைக்குமாறு தெரிவித்துள்ளார். இடம் அங்கீகரிக்கப்பட்ட நியூ எல்லீஸ்நகர் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் அமைகிறது. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட (ம.வ./ம.(ம.ம) எண்.44/85, மனைப்பிரிவில் சமுதாய உபயோகத்திற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட 5570.35 ச.மீ. இடத்தில் சுமார் 1670.25 ச.மீ. அளவுள்ள இடத்தை வணிக உபயோகம் மற்றும் பொது உபயோகமாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் கருத்தினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 88**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 12.7.2007**

* * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007**ம் ஆண்டு **ஜுலை** திங்கள் **18-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

1) **சி.டபிள்யு.3 / 1436 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 13.7.2007ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 89**
**பதிவு செய்யப்பட்டது**

2) **சி.டபிள்யு.2 / 4395 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 13.7.2007ம் தேதி நடைபெற்ற கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 90**
**பதிவு செய்யப்பட்டது**

**3) ம.நி.2/34666/05**

மதுரை மாநகராட்சி பொறியியல் பிரிவிற்கு பணியிடங்கள் தோற்றுவிப்பது மற்றும் கூடுதல் பணியிடங்கள் நிர்ணயம் செய்வது தொடர்பாக ஏற்கனவே மதுரை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.174, நாள் : 19.7.2006–ல் தீர்மானிக்கப்பட்டவாறு தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு 87 பணியிடங்களும் தேர்ச்சிதிறன் நிலை 1–க்கு 71 பணியிடங்களும், தேர்ச்சிதிறன் நிலை–2க்கு 157 பணியிடங்களும் முடிவாக நிர்ணயம் செய்ய அரசுக்கு இவ்வலுவலக 3.8.06–ந் தேதிய கடிதத்தின் வாயிலாக பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திடமிருந்து வரப்பெற்றிருந்த கடிதம் எண்.7947/2000/F4, நாள் : **15.11.2006**–ந் தேதிய கடிதத்தில் கோரியததற்கிணங்கவும், மதுரை மாநகர மக்களின் அன்றாடத் தேவையான குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடை வசதி, சாலை வசதி ஆகியவற்றை தொய்வின்றி சிறப்பாக செய்யும் பொருட்டு கூடுதல் தொழில்நுட்ப பணியிடங்களை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியத்தின் பேரில் அரசாணை நிலை எண்.**1255** RD & LR , நாள் : **30.8.1983** , அரசாணை நிலை எண்.**406**, Transport Department நாள் : **23.2.1987** மற்றும் அரசாணை நிலை எண்.**261**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : **14.10.96**–ன்படி அளவுகோலின் அடிப்படையில் கணக்கிட்டபிறகு கீழ்க்கண்டவாறு தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை **111** ஆகவும், தேர்ச்சிதிறன் உதவியாளர் நிலை **1**–க்கு **152**, தேர்ச்சிதிறன் உதவியாளர் நிலை **2**–க்கு **175** பணியிடங்களும் மற்றும் தேர்ச்சி திறனற்ற பணியிடங்களின் எண்ணிக்கை **1112** ஆகவும் உயர்த்தி மேற்படி பணியிடங்களுக்கு பணியாளர்களின் எண்ணிக்கையை முடிவாக நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்குமாறு இவ்வலுவலக **17.11.2006** மற்றும் **26.3.2007**–ந் தேதிய கடிதங்களின் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் : 91**

**பதிவு செய்யப்படுகிறது. மேலும் தற்போது பணியாற்றும் தகுதியுள்ள பணியாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறது.**

## 4) ம.பொ.4/ம.எண்.451/ 06-07

மதுரை மாநகராட்சி வார்டு எண்.**13**ல் அமைந்துள்ள மாநகராட்சி பள்ளியான காக்கைபாடினியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கழிப்பறை வசதிகள் மற்றும் மராமத்து செய்யும் பணிகளுக்காக டெண்டர் கோரப்பட்டதற்கு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் மதிப்பீடு விலை விகிதத்தைவிட 0.43% குறைவாக டெண்டர் சமர்பித்த திரு.எம்.கருப்பசாமி அவர்களின் டெண்டர் விலை விகிதத்தை ஏற்று, மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின்முன் ஒப்புதல் பெற்று அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 92**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 5) ம.ந.1/16381/ 06

மதுரை மாநகராட்சி மணி மகப்பேறுமனையில் மருத்துவ அலுவலராக **5–6–1986** முதல் பணியாற்றி வரும் திருமதி. டாக்டர். ஜெ.செல்லப்பொண்ணு தொடர்ந்து இருபது ஆண்டுகள் பணியாற்றி உள்ளதால், அன்னாருக்கு கீழ்கண்டவாறு சிறப்புநிலை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**5.6.2006** முற்பகல் முதல் சிறப்புநிலைை வழங்கி, அதற்கான சிறப்புநிலை ஊதியம் : ரூ.10,000-325-15,200.

**மாமன்ற தீர்மானம் எண் : 93**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 6) ம.ந.1/27639/ 06

மதுரை மாநகராட்சி முத்துசாரதா மகப்பேறுமனையில் **5.6.1986** முதல் மருத்துவ அலுவலராக பணியாற்றி வரும் திருமதி. டாக்டர். கே. ஆனந்தி தொடர்ந்து இருபது ஆண்டுகள் பணியாற்றி உள்ளதால், அன்னாருக்கு கீழ்கண்டவாறு சிறப்புநிலை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**5.6.2006** முற்பகல் முதல் சிறப்புநிலைை வழங்கி, அதற்கான சிறப்புநிலை ஊதியம் : ரூ.10,000-325-15,200.

**மாமன்ற தீர்மானம் எண் : 94**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 7) H.F.1/ 7693/ 07

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.**15**ல் பணிபுரிந்து வரும் திருமதி. எஸ்.ரமினா பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக, சென்னை மாநகராட்சிக்கு ஒருவழிப்பணி மாறுதல் செய்யக் கோரி மனு செய்துள்ளதின் பேரில் அவரை பணி மாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம். மேற்படி

ஒருவழிப் பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்ற தீர்மானம் எண் :95**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) மநி.1/18107/2006**

ஜவஉறர்லால் தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகர அபிவிருத்தி திட்டத்திற்கு ரூ.2360 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது இவற்றில் மாநகராட்சி மூலம் ரூ.1477 கோடி அளவில் ஏழுவருட காலத்திற்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை ரூபாய் 520 கோடி மதிப்பீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது மேலும் 2007-2008க்குள் கூடுதலாக ரூபாய் 500கோடி மதிப்பீட்டிற்கு திட்டம் ஒப்புதல் பெரும் நிலையில் உள்ளது. மேற்படி திட்டங்களை மாநகராட்சி மூலம் நிறைவேற்றுவதற்கு கூடுதல் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களை நியமிக்க அரசாணை (டி) எண் 105 நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கள் துறை, நாள் 26.06.07 அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் ஒன்றும் தோற்றுவிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மாநரகாட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் ஒன்று உள்ளது. மதுரை மாநகராட்சி மூலம் சுமார் 1000 கோடி மதிப்பீட்டிற்கு மேல் பணிகள் துவங்க இருப்பதால் கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தை தலைமை பொறியாளர் அந்தஸ்தில் உயர்த்தினால் திட்டங்களுக்கு தேவையான தொழில் நுட்ப அனுமதிகள் காலதாமதம் ஏற்படாமல் வழங்க ஏதுவாக இருக்கும் எனவே ஏற்கனவே உள்ள கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தை தலைமை பொறியாளர் அந்தஸ்திற்கு உயர்த்த அரசின் அனுமதி கோர மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :96**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9) மநி.6/ 24699/ 07**

அரசாணை (நிலை) எண்.161, நகராட்சிகள் நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நநி2) துறை நாள். 30.12.2006–ன்படி நகர்புறங்களில் வசிக்கும் ஏழை குடும்பங்களுக்கு கழிப்பறை வசதி ஏற்படுத்திக் கொள்ள ரூ.1000/- வீதம் மான்யம் வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது. மான்யத் தொகையானது வேலை முடிவுற்ற பின்னரே அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதம் ஆர்.ஓ.சி.எண். 62346/2006/J2 நாள்: 30.6.2007ன்படி, மதுரை மாநகராட்சிக்கு மொத்தம் 500 அலகுகள் (Units) அமைக்க மொத்தம் ரூ.5,00,000/- மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், பயனாளிகள் பட்டியலுடன் மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அதன்படி மதுரை மாநகராட்சியில் 72 வார்டுகளிலும் ஒரு வார்டுக்கு 6 முதல் 8 அலகுகள் (யூனிட்) வீதம் மொத்தம் 500 பயனாளிகளை தேர்வு செய்து, தேர்வு செய்த பட்டியலை நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு அனுப்பி மான்யத் தொகை பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :97**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10) Jn.S1/24696/ 07**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் தற்பொழுது ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டம் நடைபெறுவதால். அதை பார்வையிட டெல்லி மற்றும் சென்னையிலிருந்து முக்கிய மற்றும் மிக முக்கிய பிரமுகர்கள் வருவதால், அவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு ஸ்கார்பியோ வாகனம் ரூ.9,75,000 (உத்தேச மதிப்பீடு) செலவில் வாங்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :98**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11) Jn.S1/20952/ 07**

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர்த் திட்டம் 2வது வைகை குடிநீர் திட்ட செயலாக்கம், முதலாவது வைகை குடிநீர் திட்ட பராமரிப்பு, மணலூர் அரசரடி, மேலக்கால் மற்றும் வடக்கு, தெற்கு நீர் உந்து குழாய்களின் பராமரிப்பு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை குழாய்களின் பராமரிப்பு பணிகள் உடனுக்குடன் செய்ய வேண்டி உள்ளதால், திரு.எஸ். முருகேசன், உதவி நிர்வாகப் பொறியாளர் (வைகை குடிநீர் திட்டம்) அவர்களுக்கு ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) திரு. பி. அய்யனார், உதவி பொறியாளர் (வைகை குடிநீர்த் திட்டம்) அவர்களுக்கு ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) Imprest Amount கையிருப்பு தொகையாக வழங்க மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :99**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 12) JNS 1/03986/2006

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் (JnJURM) மதுரை நகரில் விடுபட்டுள்ள தெருக்களுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கவும் ஏற்கனவே உள்ள திட்டத்தை மேம்பாடு செய்யவும் திட்ட மதிப்பீடு தொகை ரூ.231 கோடிக்கு மத்திய அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் புது டெல்லியில் உள்ள சி.எஸ். ‡ எம்.சி குழுவிற்கு 20.07.2007ம் தேதியன்று ஒப்புதலுக்கு வர இருப்பதால் மதுரை மாநகராட்சி சார்பாக வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் அகியோர் புதுடெல்லி சென்று கலந்து கொள்ள இருப்பதை மாமன்றத்தின் தகவலுக்கும் அதற்குண்டான செலவினத்தை மாநகராட்சியின் நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :100**

**இந்த கூட்டத்தில் மேயர் மற்றும் துணை மேயருடன் நான்கு மண்டலத் தலைவர்களும் கலந்து கொள்ள டெல்லி செல்ல அனுமதித்து மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 13) Jn.S.1/27913/ 2007

மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ், 2006–2007 மற்றும் 2007–2008ம் ஆண்டுகளில் கீழ்கண்ட திட்டங்களுக்கு மத்திய மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | வைகை குடிநீர் திட்டம் | –59.316 கோடி |
| 2) | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | –74.29 கோடி |
| 3) | வைகை ஆற்றின் குறுக்கே மூன்று தடுப்பணைகள் கட்டுதல் | –4.77 கோடி |
| 4) | குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டம் (21 குடிசை பகுதி) பகுதி–1 | –26.85 கோடி |
| 5) | குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டம் (58 குடிசை பகுதி) பகுதி–II | –103.57 கோடி |
| 6) | மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்தல் | –256.87 கோடி |

மேற்கண்ட திட்டங்களுக்கு வைகை குடிநீர் திட்டப்பணி நடைபெற்று வருகிறது. மற்ற பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட திட்டப்பணிகளை கண்காணிக்க (Project Monitoring Committee) திட்டக் கண்காணிப்பு குழு மற்றும் (Consultant Service in Quality Audit) தொழில்நுட்ப தணிக்கை குழு ஆகிய இரண்டு தொழில்நுட்ப ஆலோசனை குழுக்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அமைக்கவும், அதற்காகும் ஆலேசானை கட்டணத் தொகையை TNUDF-III திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :101**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 14) Jn.S.1/3986/ 99

மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ், கீழ்கண்ட திட்டங்களுக்கு விரிவான அறிக்கை தயார் செய்து மத்திய மாநில அரசின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பாதாள சாக்கடை திட்டம் Phase – III (விடுப்பட்ட பகுதிகள் மற்றும் 30 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட பாதாளச் சாக்கடை சீரமைத்தல் | – | 239.34 கோடி |
| 2) | Heritage பழைமை மிக்க பண்பாட்டு பகுதிகளை புனரமைத்தல் | – | 117.00 கோடி |
| 3) | சென்ட்ரல் மார்க்கெட் இடம் மாற்றியமைத்தல் | – | 58.00 கோடி |
| 4) | அடுக்குமாடி வாகன காப்பகம் | – | 7.60 கோடி |

மேற்கண்ட நான்கு திட்டங்களுக்கு மத்திய மாநில அரசுகளின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றபின், மேற்படி பணிகள் நடைபெறவுள்ளதால், திட்டப்பணிகளை கண்காணிக்க (Project Monitoring Committee) திட்டக் கண்காணிப்பு குழு மற்றும் (Consultant Service in Quality Audit) தொழில்நுட்ப தணிக்கை குழு ஆகிய இரண்டு தொழில்நுட்ப ஆலோசனை குழுக்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அமைக்கவும், அதற்காகும் ஆலேசானை கட்டணத் தொகையை TNUDF-III திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :102**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) <u>ம.வ.1/23871/2007</u>**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செய்யப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்காக மதுரை மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்காக மாநகர அபிவிருத்தி திட்டம் தயார் செய்து மத்திய மாநில அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் ஒப்புதல் பெறப்படும் போது மாநகராட்சியின் பல்வேறு இனங்களில் சீர்திருத்த நடவடிக்கை செய்ய மதுரை மாநகராட்சியும் மாநில அரசம் மத்திய அரசுடம் ஒப்பந்தம் (Memorandum of Agreement) செய்து கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் சொத்து வரியை உரிய காலத்தில் செலுத்துபவர்களுக்கு 2% கழிவு வழங்கி வரிவசூலினை ஊக்கப்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே சொதது வரியை உரிய காலத்தில் அதாவது முதல் அரையாண்டிற்கு உரிய கேட்புத் தொகையை ஏப்ரல் 15க்குள் வரிசெலுத்துபவர்களுக்கும் இரண்டாவது அரையாண்டிற்குரிய கேட்புத் தொகையை அக்டோபர் 15க்குள் வரிசெலுத்துபவர்களுக்கும் இரண்டு சதவீதம் தொகையை சொத்துவரியிலிருநது கழிவு கொடுத்து வரிவசூலினை ஊக்குப்படுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** மாமன்ற ஒப்புதல் பெற்ற பின்பு அரசின் ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்தப்படும்.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :103</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**16) <u>ம.பொ.6/184/ 07</u>**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் TUFISUL-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள கீழ்கண்ட வேலைகளுக்கு டெண்டர் வரவழைக்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைகளானது JNNURM-ல் மழைநீர் வடிகால் திட்டம் (Storm Water Drain Scheme) வேலைகளின் வரிசையில் சேர்க்கப்பட்டு செயல்பட்டுத்தப்பட உள்ளதால், இவ்வேலைகளை ரத்து செய்யவும், இவ்வேலைகளுக்கு பதிலாக கீழ்கண்ட வேலைகளை புதிதாக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**<u>ரத்து செய்யப்பட வேண்டிய வேலைகளின் விபரம்</u>**

| வரிசை எண் | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 60 | **ம.பொ.6/ம.எண்.965/05** ஜெய்ஹிந்த்புரம் மெயின்ரோடு மழைநீர் வடிகால் (1st rach) அமைத்தல். | 17.65 |
| 2 | 60 | **ம.பொ.6/ம.எண்.965/05** ஜெய்ஹிந்த்புரம் மெயின்ரோடு மழைநீர் வடிகால் (2nd rach) அமைத்தல். | 23.35 |
| 3 | 60 | **ம.பொ.6/ம.எண்.965/05** ஜெய்ஹிந்த்புரம் மெயின்ரோடு மழைநீர் வடிகால் (2nd rach) அமைத்தல். | 24.00 |
| 4 | 33 | **ம.பொ.6/ம.எண்.1068/05** மேலபொருமாள் மேஸ்திரி வீதி, கிருஷ்ணராயர் தெப்பக்குளம் சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 18.80 |
| 5 | 34& 35 | **ம.பொ.6/ம.எண்.857/05** வைகை தென்புரம் தார்சாலை அமைத்தல் தமிழ்சங்கம் சாலை – டி.வி.கே.சாலையில் சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 22.50 |
| 6 | 35 | **ம.பொ.6/ம.எண்.1042/05** வடக்குவெளி வீதி, வக்கீல் புதுத்தெரு, பழைய சொக்கநாதர் கோவில் தெருவில், சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 17.90 |
| 7 | 32 | **ம.பொ.6/ம.எண்.355/05** நேதாஜி தெருவில் சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 5.70 |
| 8 | 36 | **ம.பொ.6/ம.எண்.525/05** வளையல்கார தெரு, மேற்காவணி மூலவீதி, ராமசாமி கோனார் தெரு, சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 23.35 |
| 9 | 38 | **ம.பொ.6/ம.எண்.667/05** கீழாவணி மூலவதி, மேலமாசி வீதியில் சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 16.04 |
| 10 | 42 | **ம.பொ.6/ம.எண்.1094/05** பாலிடெக்னிக் முதல் ஆண்டாள்புரம் வரை சிமிண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல். | 7.00 |

**புதியதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வேலைகளின் விபரம்**

| வரிசை எண் | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | 60,61, 62 | **ம.பொ.6/ம.எண்.184/07** முனியாண்டி கோவில் தெரு, வ.உ.சி.தெரு, காமராஜர் தெரு, அண்ணா முக்கிய வீதி குறுக்குத் தெரு தார் சாலை அமைத்தல். | 19.40 |
| 2 | 60,61, | **ம.பொ.6/ம.எண்.185/07** திருப்பதி நகர், ராமமூர்த்தி நகர், நேதாஜி குறுக்கு தெரு, பகவதி அம்மன் கோவில் தெரு, சிமிண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல். | 23.30 |
| 3 | 60,61, | **ம.பொ.6/ம.எண்.229/07** வாஞ்சிநாதன் தெரு, பாரதியார் மெயின் ரோடு தார் சாலை அமைத்தல். | 23.30 |
| 4 | 64 | **ம.பொ.6/ம.எண்.223/07** மீனாம்பிகை நகர் மெயின், ஜீவாநகர் பகுதியில் தார் சாலை அமைத்தல். | 21.30 |
| 5 | 32 | **ம.பொ.6/ம.எண்.206/07** டவுன்ஹால் ரோடு சுற்றுப்புற சாலை மராமத்து செய்தல் தார் சாலை அமைத்தல். | 23.25 |
| 6 | 65 | **ம.பொ.6/ம.எண்.222/07** முத்துப்பட்டி மெயின் ரோடு தார் சாலை அமைத்தல், | 19.00 |
| 7 | 65 | **ம.பொ.6/ம.எண்.225/07** நேருநகர் 1வது தெருவில் தார் சாலை அமைத்தல். | 24.90 |
| 8 | 65 | **ம.பொ.6/ம.எண்.226/07** பாலாஜி தெருவில் தார் சாலை அமைத்தல். | 24.90 |
| 9 | 38 | **ம.பொ.6/ம.எண்.342/07** வெங்கலகடை தெரு, ஜடாமுனி கோவில் தெருவில் தார் சாலை அமைத்தல். | 20.50 |
| 10 | 38 | **ம.பொ.6/ம.எண்.343/07** கான்ஜா மேட்டுதெரு கீழாவணி மூலவீதி தார் சாலை அமைத்தல். | 12.50 |

மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :104**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 17) ம.நி.2/07653/07

மதுரை மாநகராட்சியில் கணிப்பொறி செயல்பாட்டுக்காக திட்ட அமைப்பாளர் –1, உதவி திட்ட அமைப்பாளர் – 1, புள்ளி விபரக் குறிப்பாளர் – 8 என கூடுதல் பணியிடங்களை அதற்கென குறிப்பிட்ட கல்வித் தகுதியில் அனுமதிக்குமாறு பரிந்துரை செய்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் தனது கடிதம் எண்.17752/99/மாநஅ1, நாள்:18.9.2001–ல் அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டிருந்ததின் பேரில், கூடுதல் பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதித்தும், ஏற்கனவே பணியாற்றி வரும் கணினி பணியாளர்களுக்கு கல்வித் தகுதி அடிப்படையில் முன்னுரிமை அளித்து பணிமுதிர்ச்சி அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டியது என மாமன்றத் தீர்மானம் எண்.122, நாள் : 29.6.06–ல் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் மதுரை மாநகராட்சியில் மின் ஆளுமையை முழுமையாக செயல்படுத்தும் பொருட்டும், எதிர்காலத்தில் கணிணி மயமாக்கலை முன்னிட்டும், நகராட்சி நிர்வாக ஆணையாளரின் கடிதம் எண்.5163/2003/ஐ.டி.–1, நாள்: 4.2.07–ல் தெரிவித்ததற்கிணங்க, கீழ்க்கண்ட விபரப்படி புதிய கூடுதல் பணியிடங்களை தோற்றுவிக்கவும்.

| | |
|---|---|
| திட்ட ஆராய்வாளர் (System Analyst) | 1 (ஒன்று) |
| திட்ட அமைப்பாளர் | 2 (இரண்டு) |
| உதவி திட்ட அமைப்பாளர் | 5 (ஐந்து) |
| புள்ளி விபரக் குறிப்பாளர் | |
| மைய அலுவலகம் – 8 | |
| மண்டல அலுவலகம் – 8 | 45 (நாற்பத்தி ஐந்து) |
| வரிவசூல் மையம் – 27 | |
| சேவை மையம் – 2 | |

| Name of the post | Method of appointment | Qualification |
|---|---|---|
| 1. Data Entry Operator | By Promotion from the existing Qualified persons Who are in the next lower scale(ordinary) to the Promotion Scale.<br>(or)<br>(ii) By direct Recruitment / | B.Sc.Computer Science degree of any recognis University or any degree with PGDCA awarded by any University by any University UGC.<br>-do- |
| 2. Asst. Programmer | (i) By Promotion from the existing Qualified persons Who are in the next lower scale (ordinary) to the Promotion Scale.<br>(or)<br>(ii) By direct Recruitment / | (i) B.Sc.Computer Science degree of any recognised/ University or any degree with PGDCA awarded by any University recognised by the UGC<br>-do- |
| 3.Programmer | (i) By Promotion from the existing Qualified persons Who are in the next lower scale (ordinary) to the Promotion Scale.<br>(or)<br>(ii) By direct Recruitment / | (i) Must have passed M.Sc. Computer Science or MCA or BE degree in Computer Science/ Information Technology<br>-do- |
| 4. System Analyst | (i) By Promotion from the existing Qualified persons Who are in the next lower scale (ordinary) Scale.<br>(or)<br>(ii) By direct Recruitment / | (i). Must have passed M.SC Computer Science or M.C.A. or B.E.degree in Computer Science/ Information Technology<br>-do- |

மேற்காணும் பணியிடங்களுக்குரிய பணிவிதிகளுக்கு உரிய ஒப்புதலை வழங்க அரசை கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :105**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 18) மு.நி.2/15788/07

மதுரை மாநகராட்சியில் இயங்கி வந்த மின்பிரிவு **30.4.95** முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டதில், மதுரை மாநகராட்சிப் பகுதியிலுள்ள தெருவிளக்கு பராமரிப்பை மதுரை மாநகராட்சியே ஏற்றுத் தொடர்ந்து பராமரித்து வர கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிப்பது தொடர்பாக பிறப்பிக்கப்பட்டிருந்த அரசாணை (நிலை) எண்.**151**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : **10.6.97**–ன்படி கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டிருந்தது.

| **வ.எண்.** | **பணியிட விபரம்** | **பணியிட எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பாதை ஆய்வாளர் | 4 |
| 2. | எலக்ட்ரீசியன் | 8 |
| 3. | வயர்மேன் | 16 |
| 4. | ஹெல்ப்பர் | 16 |
| 5. | தினக்கூலி | 40 |

மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு பணிவிதிகள் எதுவும் தோற்றுவிக்கப்படாத நிலையில் பதவி உயர்வுப் பணியிடங்கள் நிர்ணயம் செய்ய இயலவில்லை.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு பணிவிதிகள் தோற்றுவிக்கப்படுவது அவசியமாகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு மின்வாரிய பணிவிதிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, கீழ்க்கண்ட விபரப்படி பணிவிதிகள் தோற்றுவிக்கவும்,

| வ.எண். | பதவியின் பெயர் | நியமனமுறை | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1. | Line Inspector | By Promotion **or** By Direct recruitment | Diploma in Electrical Engineeing |
| 2. | Electrician | By Promotion **or** By Direct recruitment | Diploma in Electrical Engineeing |
| 3. | Wireman | By Promotion **or** By Direct recruitment | ITI Certificate in Electrical Wiring. |
| 4. | Helper | By Promotion **or** By Direct recruitment | ITI Certificate in Electrical Wiring. |

(i). மேற்கண்டவாறு தோற்றுவிக்கப்படும் புதிய பணிவிதிகள் தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996–ல் உள்ள பொறியியல் பணிவிதிகளின் கீழ் கொண்டு வரவும்,

(ii). கீழ்க்கண்டவாறு பதவி உயர்வுக்கு வழிவகை செய்யவும்,

மின்பாதை ஆய்வாளர் (4200-130-7840)
எலக்ட்ரீசியன் (3795-110-7095)
வயர்மேன் (3370-100-6370)
ஹெல்ப்பர் (3050-75-3950-80-5070)

(iii). பொறியியல் பணியில் காலிப்பணியிடங்கள் இருப்பின் அதற்கான கல்வித்தகுதியை தெருவிளக்கு பணியாளர் பெற்றிருப்பின் அன்னாரை பணிமாறுதல் மூலமாகவோ அல்லது பதவி உயர்வு மூலமாகவோ பணிமூப்பு அடிப்படையில் பொறியியல் பிரிவு பணியிடங்களில் பணியமர்த்துவது மற்றும் கல்வித்தகுதி, அனுபவம் வாய்ந்த பொறியியல் பிரிவு பணியாளர்களை தெருவிளக்குப்பிரிவில் பணியமர்த்துவது குறித்து தெளிவுரை வழங்கக் கோரியும்

(iv). ஆறாவது ஊதியக்குழுப் பரிந்துரையில் அன்னார்கள் ஏற்கனவே பெற்றுவரும் ஊதியத்திற்கு இணையான ஊதிய விகிதம் இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையாக தெருவிளக்கு பராமரிப்பு பணியிடங்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசைக் கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :106**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 19) மதி.1/ 24670/ 2007

மதுரை மாநகராட்சி தல்லாகுளம் கிராமம் புல எண்.222/07–ல் உள்ள 16.5 ஹெக்டேர் நிலத்தினை காவல் துறையின்கீழ் இயங்கி வரும் குற்றப் புலனாய்வு துறைக்கு நிலமாற்றம் செய்ய மாநகராட்சி தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு மதுரை வருவாய் கோட்டாட்சியர் கடிதம் 10660/2007 எண்ணிட்ட 13.7.2007–ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டது.

மேற்படி இடம் மதுரை மாநகராட்சி தல்லாகுளம் கிராமம் பழைய புல எண்.222/07 புதிய புல எண். 160 & 162–ல் கண்டுள்ள சர்க்கார் தீர்வை ஏற்படாத தரிசு புறம்புகல் நிலமாகும். மேற்படி இடத்தில் 94 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள சத்துணவுக்கூடம் நீங்கலாக 1434.5 சதுர மீட்டர் இடத்தை காவல்துறையின் கீழ் இயங்கிவரும் குற்றப் புலனாய்வு துறைக்கு நிலமாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபணை இல்லையென சான்று வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் கருத்தினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :107**

**இந்தப் பகுதியில் மாநகராட்சி பள்ளி ஏதும் இல்லை என மாமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில் மாநகராட்சி பள்ளிக்கூடம் கட்டுதவற்கு. இந்த இடத்தை மாநகராட்சிக்கு வழங்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ள மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 20)பொ 2/13816/2006

மதுரை மாநகராட்சி வார்டு எண் 34 வெங்கடசாமி நாயுடு அக்ரஉறாரம் கதவு எண் 4A உேறப்பி மேன் திருமணமஉறால் உரிமையாளர் திரு. V. நடராஜன் தனது திருமண மஉறாலுக்கு அருகிலுள்ள மாநகராட்சி ஆதிமூலம் பிள்ளை அக்ரஉறாரம் எண் 2 ஆரம்பப்பள்ளி வளாகத்தின் பின்புறம் பயன் படாத நிலையில் காலியாகவுள்ள மேற்படி இடத்தில் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு சமூக விரோத செயல்கள் செய்யப்படுவதால், மாநகராட்சி மாமன்ற ஒப்புதலுடன் மாத வாடகைக்கு மேற்படி

காலியிடத்தை வழங்க கோரியுள்ளார். மாநகராட்சியின் வேறு பயன்பாட்டிற்கு மாற்றிக்கொள்ள ஆட்சேபனை இல்லை என்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் குறிப்பு கொடுத்துள்ளார். ஆய்வு செய்ததில் மேற்கண்ட இடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான 36 ‘ X 46 ‘ சதுர அடி அளவில் காலி இடம் உள்ளது. எனவே மாநகராட்சி ஆதிமூலம் அக்ரஉறாரம் எண் 2 ஆரம்பப்பள்ளி பின்புறம் உள்ள 36 ‘ X 46 ‘ சதுர அடி காலியிடத்தை மாநகராட்சிக்கு வேறு வகையில் மேற்கண்ட இடத்தினை பயன்படுத்தி கொள்ள அப்பள்ளியின் தலைமைஆசிரியர் குறிப்பு கொடுத்துள்ளதாலும், சமூக விரோதிகளால் ஆக்கரமிப்புகள் மற்றும் தகாத செயல்கள் ஏற்படா வண்ணம் பாதுகாக்க பள்ளியின் பின்புறம் 36 ‘ X 46 ‘ சதுர அடி அளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தை ஏலம் / டெண்டர் மூலம் ஒப்படைக்கலாமா என்பதற்கு மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :108**</u>

<u>**ஒத்தி வைக்கப்படுகிறது.**</u>

## 21) <u>ம.வ.1/23871/ 2007</u>

ஜவஹர்லால் நேரு நகர தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்காக மதுரை மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்காக மாநகர அபிவிருத்தித் திட்டம் தயார் செய்து மத்திய மாநில அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் ஒப்புதல் பெறப்படும் பொழுது, மாநகராட்சியின் பல்வேறு இனங்களில் சீர்திருத்த நடவடிக்கை செய்ய, மதுரை மாநகராட்சி, மாநில அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவை மும்முனை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் சொத்துவரி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

1971 வருடாந்திய மதுரை மாநகராட்சி சட்டம் 122 பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

1) பொதுமக்கள் இறை வழிபாட்டிற்காக பயன்படுத்தும் இடங்கள்
2) பயன்படுத்துவதற்காக வாடகை வாங்காமல் இருக்கும் சத்திரங்களும், பயன்படுத்துவதற்காக சத்திரத்திற்கு வாங்கும் வாடகையை பிற காரியங்களுக்கு பயன்படுத்தும் சத்திரங்கள்.
3) கைவிடப்பட்டவர்கள் மற்றும் விலங்குகளுக்கு புகழிடம் அளித்தல், அனாதை குழந்தைகளின் இடங்கள், செவிடர் ஊமை விடுதிகள் மற்றும் பள்ளிகள், முதியோர் இல்லங்கள், நெறிபிறழ்ந்த மகளிர் காப்பிடம் ஆகியவைகள்.
4) தொல்பொருள் நினைவு சின்னங்கள், புராதன சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள்
5) இலவச மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களும்
6) இரயில்வே நிர்வாகத்தால் நடத்தப்படும் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்
7) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள்
8) ரூபாய் 119–க்கும் குறைவுடைய ஆண்டு மதிப்பு கட்டிடம் அல்லது நிலம்
9) வருமானம் இல்லாத அரசு சொத்து
10) அறக்கட்டளைகளுக்கு பாத்தியப்பட்ட என்கிற வார்த்தையில் கல்வி நிறுவனங்களும், அதனை சார்ந்த தங்கும் விடுதிகள் ஆகியவையும் வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இந்த இனங்களில் வழிப்பாட்டு தலங்கள், சுடுகாடுகள், இடுகாடுகள் மற்றும் வராலற்று சிறப்புமிக்க புராதன சிறப்பு நினைவு சின்னங்கள் நீங்கலாக, வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மற்ற அனைத்து இனங்களுக்கும் வரிவிதிப்பு மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**குறிப்பு :**</u> மாமன்ற ஒப்புதல் பெற்றபின், அரசின் சட்டத் திருத்தம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

<u>**மாமன்ற தீர்மானம் எண் :109**</u>

<u>**ஒத்தி வைக்கப்படுகிறது.**</u>

## 22) <u>ம.வ.1/24688/2007</u>

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் அசையா சொத்துகளாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுவதற்கும், குத்தகையை புதுப்பிப்பது குறித்தும் திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறையின் 3.7.2007ம் தேதிய அரசாணை (நிலை) எண்.92–ஐ மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :110**</u>

<u>**பதிவு செய்யப்பட்டது**</u>

**23) Jn.S1/ 22918/ 07**

மதுரை மாநகராட்சி குடிநீர்த் திட்டம் பண்ணைப்பட்டியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு நடப்பு நிதியாண்டிற்கு தேவையான ஆலம் (Sulphate of Alumina Ferric) 600 மெட்ரிக் டன். அதற்கான தோராய மதிப்பீடு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தர விலைப்பட்டியல் 2007–2008ன்படி ரூ.18,36,000க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்கான நிர்வாக ஒப்புதல் வழங்க மாமன்றத்தைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :111**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**24) ம.வ.5/24425/2007**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 34 வெங்கடசாமி நாயுடு அக்ரஉறாரம் கதவு எண் 4 வீட்டின் பின்புறத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடம் புதராக இருப்பதாலும், சமூக விரோத செயல்கள் நடைபெற்று வருகிறது என்றும், மேற்படி இடத்தை வாடகை அடிப்படையில் தனக்கு கொடுக்குமாறும், மேற்படி இடத்தை சுத்தமாக பராமரித்து சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பாடு நடப்பதாகவும் உறுதி கூறி தெரிவித்துள்ள திரு.எம்.முத்துகிருஷ்ணன் என்பவரின் மனு வாசிக்கப்பட்டு, மேற்படி இடம் சர்வே வார்டு எண்.7, பிளாக் எண்.13, டி.எஸ்.நம்பர் 7/1A1 ல் உள்ள இடம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி கட்டிடத்தின் வளாகத்திற்கு உள்ளே இருப்பதாகவும், மேற்படி இடம் மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளி உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் என்று முதன்மை நகரமைப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கோரும் பிரஸ்தாப இடம் 48 x 73 சதுர அடி அளவில் உள்ளது. மேற்படி இடம் சமூக விரோதிகளால் ஆக்கரமிப்புகள் மற்றும் தகாத செயல்கள் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும், மாநகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டும் மேற்கண்ட 48 ‘ X 73 ‘ சதுர அடி அளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தை ஏலம் / டெண்டர் மூலம் ஒப்படைக்கலாமா என்பதற்கு மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :112**
**ஒத்தி வைக்கப்படுகிறது.**

**25) ம.பொ.8/ 39657-II/ 07**

மதுரை மாநகராட்சி வைகை இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைச் சார்ந்த, தொகுதி II பண்ணைப்பட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை 71.6 mld திறனிலிருந்து 118.6 mld–க்கு மேம்படுத்தும் பணிக்கான அரசு ஆணை 67/MAWS/WSII/12.08.2006-ல் பெறப்பட்டு இரண்டாவது முறையாக 20.4.2007 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி டெண்டரில் கலந்து கொண்ட M/s. P&C Construction Pvt. Ltd., ஈரோடு குறைந்த விலைப்புள்ளியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அன்னார் மேற்படி விலைப்புள்ளியில் செட்டியூல் (A)-யில் உள்ள வடிவாக்கம் மற்றும் செயலாக்கப் பணிகளுக்கு மதிப்பீட்டு தொகையிலிருந்து 2.548% மிகுதியாக கொடுத்ததை ஏற்றுக்கொண்டு, டெண்டர் கமிட்டி செட்டியூல் (B)-யில் உள்ள பராமரிப்பிற்கான விலைப்புள்ளியினை குறைத்து கொடுக்க கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஐந்தாண்டு பராமரிப்பு பணிக்காக விலைப்புள்ளியில் ஒப்பந்தகாரர் கோரப்பட்ட தொகை ரூ.3.87 கோடியிலிருந்து ரூ.20 லட்சம் குறைத்து ரூ.3.67 கோடியாக குறைத்து கொடுக்க ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி விலைப்புள்ளியை அங்கீகரித்து வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :113**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

(ஒம்...) ஜி. தேன்மொழி

மதுரை

மேயர்

நாள் : 16.7.2007

மதுரை மாநகராட்சி